பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a New

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 28 சனிக்கிழமை (12-01 ~2) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:48

# அதிக விலைக்கு எரிபொருள் விற்போரை கைது செய்ய யாழ்.நீதிமன்றம் உத்தரவு!

## அடுத்த செவ்வாய்க்கிழமை முதல் கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.12

குடாநாட்டில் சட்ட அங்கீகாரம் இன்றியும், அதிக விலைக்கும் விற்கப்படும் பெற்றோல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களைக் கைப்பற்றி, அவ்வாறு விற்பனை செய்தோரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துக!

- இவ்வாறு உத்தரவிட்டிருக்கின்றார் யாழ்மாவட்ட நீதிபதி இதவிக்னராஜா.

மேற்படி எரிபொருள்களை அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையங்களில் போதியளவு பெறமுடியவில்லை என்றும் -

கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு இவை விற்கப்படுகின்றன என்றும் -

இதனால் வீட்டு மற்றும் விவசாயத் தேவைகளை நிறைவு செய்ய முடியாது தாங்கள் அல்லற்படுகின்றனர் என்றும் -

பொதுமக்கள் தரப்பில் செய்யப்பட்ட பல முறைப்பாடுகளை அடுத்தே இந்த உத்தரவை நீதிபதி நேற்று முன்தினம் விடுத்தார்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் மூலம் இந்த நடவடிக்கைகளை எடுத்து, அது குறித்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் படியும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

### தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் 2 சிப்பாய்கள் பலி!

மன்னார்,ஜன.12

மன்னாரில் நேற்றுமுன்தினம் இரவு படைமுகாமில் காவல் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் முகாமில் கூடியிருந்து உரையாடிக்கொண்டிருந்த சமயமே இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (க-4)

# அரசியல் தீர்வு குறித்து நோர்வே நம்பிக்கை!

## புலிகளுடனும் அரசுடனும் பேசிய பின்னர் தெரிவிப்பு

கொழும்பு,ஜனவரி12

**கடந்த வாரம் விடுதலைப் புலிகளுடனும் நேற்று முன்தினம் அரசுத் தரப்புடனும் பேச்சு நடத்திய நோர்வேக் குழு, இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையை எச்சரிக்கையோடு (Cautious Optimism) வெளியிட்டிருக்கின்றது.**

நோர்வேயின் வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தலைமையிலான மூன்று பேர் கொண்ட நோர்வேக் குழு கடந்த 4ஆம் திகதி லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து, விரிவாகப் பேச்சு நடத்தியிருந்தது.

அதன் பின்னர் நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வந்த நோர்வேக் குழு

(12ஆம் பக்கம் பார்க்க)

### வேண்டாம் யுத்தம்! ரணிலிடம் மண்டேலா கோரிக்கை

கொழும்பு,ஜன.12

யுத்தசூழல் ஒன்று மீண்டும் உருவாக இடமளியாதீர்!

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார் தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா.

நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் திரைப்படம் தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெல்சன் மண்

(12ஆம் பக்கம் பார்க்க)

### நீர்கொழும்பு நடுக்கடலில் 108 பேர் சிக்கினர்!

கொழும்பு,ஜன.12

மீன்பிடி இழுவைப் படகுகளில் இத்தாலிக்குச் செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் 108 பேர் நேற்று நீர்கொழும்பு கடற்பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு இழுவைப் படகுகள் ஒரு தொகுதி ஆள்களுடன் பயணம் செய்ததைக்கண்ட கடற்படையினர் அவற்றைப் பின்தொடர்ந்து சென்று படகுகளையும் அவற்றில் சென்றவர்களையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் ஒரு லட்சம் முதல் மூன்று லட்சம் ரூபாவரை முகவர்களுக்கு வழங்கியிருந்தமை விசாரணைகளின்போது தெரியவந்தது. (க-7-ரி)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' சேவை 21ஆம் திகதியே ஆரம்பமாகும்

திருகோணமலை,ஜன.12

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று திருகோணமலை பிரதேச செயலர் வேலும்மயிலும் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தச் சேவையை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்றும் -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தமது வழித்துணை வழங்கும் பணியை 21ஆம் திகதி முதலே ஆரம்பிக்க முடியும் என நேற்று அறிவித்தது என்றும் -

அதன் பின்னர் சேவையை 21 ஆம் திகதி ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது என்றும் - அவர் மேலும் கூறினார். (க-3)

### சுரேஷின் மனு மீள்விசாரணைக்கு!

ரொறண்டோ,ஜன.12

சுரேஷ் மாணிக்கவாசகத்தை கனடாவில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதென எடுக்கப்பட்ட முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு

(12ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரிலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள கலாமண்டபத்தையே படத்தில் காண்கிறீர்கள். இந்தக் கலாமண்டபம் எதிர்வரும் 18ஆம் திகதி ஆதீனகுரு முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

### தேர்தல் கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு:

## இளவாலைப் பொலீஸாரால் ஈ.பி.டி.பி. உறுப்பினர் கைது!

இளவாலை,ஜன.12

இளவாலையில் கடந்த நவம்பர் 29ஆம் திகதி ஐ.தே.கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர் ஒருவர் இளவாலைப் பொலீஸாரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மகேந்திரம் ரஞ்சித்குமார் (வயது 21) என்ற அந்த உறுப்பினர் மல்லா

(12ஆம் பக்கம் பார்க்க)

### தென்னிந்திய நகரில் சமாதானப் பேச்சு

## புலிகள் தரப்புக் கோரிக்கையை இந்தியா ஒருபோதும் ஏற்காது

### உள்துறை இணை அமைச்சர் அறிவிப்பு

சென்னை,ஜன.12

இலங்கை அரசுடனான உத்தேச சமாதானப் பேச்சுக்களை நோர்வே ஏற்பாட்டுடன் தென்னிந்திய நகரம் ஒன்றில் நடத்தலாம் என்று யோசனை தெரிவித்து விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் கோரிக்கையை, இந்திய மத்திய அரசு ஒருபோதும் ஏற்காது.

- இவ்வாறு இந்திய உள்துறை இணை அமைச்சர் ஐடிசுவாமி நேற்று முன்தினம் நாகர்கோவிலில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்பதால், அவர்களது கோரிக்கையை ஏற்கும் பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசு மட்டுமன்றி, கர்நாடக அரசும் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கு இந்தியாவில் இடமளிக்கக் கூடாது எனக் கேட்டுள்ளது என்றும் சுவாமி குறிப்பிட்டார்.

இதேவேளை -

பட்டாளி மக்கள் கட்சி, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு தொடர்ந்து மத்திய அரசைக் கோரும் என்று அக்கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். (க-4-ரி)

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## அடுத்த வாரம் மீண்டும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கடந்த ஆண்டு மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்ட 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் தொடர்ச்சியாக ஆண்டு தோறும் இதனை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் தொடர்பான விசேட கூட்டம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நண்பகல் இடம்பெற்றது. எதிர்வரும் 17ஆம் திகதியன்று பல நிகழ்ச்சிகளை நடத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சைக்கு வெளிநாட்டு டாக்டர்கள் குழு!

## யாழ்.ஆஸ்பத்திரியில் ஒரு வாரத்துக்கு சேவை

யாழ்ப்பாணம்,ஜன.12

'பிளாஸ்ரிக்' அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் வாய்ந்த எட்டு டாக்டர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒருவார காலம் விசேட வைத்தியப் பணியை ஆற்றுவதற்காக இங்கு வரவிருக்கின்றனர்.

பிரிட்டனைச் சேர்ந்த இந்த டாக்டர்களின் குழுவுக்கு தமிழர் ஒருவர் தலைமை வகிக்கின்றார். ஏனையோர் பிற நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

பெப்ரவரி 3ஆம் திகதி முதல் யாழ்போதனா ஆஸ்பத்திரியில் இவர்கள் அறுவை சிகிச்சைப் பணியில் ஈடுபடுவர்.

உதடு - மூக்கு சத்திரசிகிச்சை, தக்காயங்கள், விபத்துக்கள் போன்றவற்றால் தழும்புகள், தடையாளங்கள் ஏற்பட்டவர்கள் உட்பட பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் அனைவருக்கும் இவர்கள் சத்திரசிகிச்சை அளிப்பர்.

இந்த சிகிச்சையைப் பெறவேண்டியவர்கள் தமது விவரங்களை யாழ் போதனா ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் பதிவு செய்யும்படி கோரப்படுகின்றார்கள்.

அதிக நோயாளர்களுக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்யவேண்டி ஏற்படின் இந்த வைத்தியக் குழுவின் சேவையை ஒரு வாரத்துக்கு அதிகமாக நீடிக்கவும் முயற்சி எடுக்கப்படும் எனத் தெரிய வந்தது.

இந்த சிகிச்சை வசதி குறித்து யாழ். போதனா ஆஸ்பத்திரியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-15-139)

# நடேஸ்வராக் கல்லூரியில் கனிஷ்ட பிரிவு ஆரம்பம்

தற்போது சுன்னாகத்தில் இயங்கி வரும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இந்த வருடம் முதல் ஆரம்பபிரிவு (கனிஷ்ட பிரிவு) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இந்த வருடம் தொடக்கம் முதலாம் தரத்துக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுவருகின்றனர்.

ஆரம்பப் பிரிவை சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கிவைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு பின்னர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இயங்கி வந்த இக்கல்லூரி கடந்த வருடம் முதல் சுன்னாகத்தில் உள்ள தனியார் வீடு ஒன்றில் தற்காலிகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# குமார், 'சட்டன' ஆசிரியர் படுகொலைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு முன்னரே தெரிந்திருந்தது

## பொலீஸ் உயர் அதிகாரி குற்றச்சாட்டு; ஆனால் அவர் மறுக்கிறார்

கொழும்பு,ஜன.12

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம், 'சட்டன' சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் ரோகண குமார ஆகியோரின் படுகொலைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு முன்னரே தகவல் தெரிந்திருந்தது. அவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதிக்கு அது குறித்து அறிவிக்கப்பட்டது.

- இப்படி ஜனாதிபதிமீது குற்றஞ் சுமத்தியிருக்கின்றார் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பந்துல விக்கிரமசிங்க.

பந்துலவிக்கிரமசிங்கவின் குற்றச்சாட்டுப் பற்றிய விவரத்தை 'த சண்டேலீடர்' பத்திரிகை விவரமாக வெளியிட்டுள்ளது.

இந்தக் கொலைகள் குறித்து உடனடியாக ஓர் இரகசியக் குறிப்பு மூலம் தான் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியதாகவும் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனால் இக்குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி குமாரதுங்க அடியோடு மறுத்துள்ளார். தனக்கு அத்தகைய இரகசியக்குறிப்பு ஏதும் தரப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, தனக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு பொலீஸ் மா அதிபரைக் கோரியுள்ளார்.

பொருந்தொகைப் பணத்தை வாரி இறைத்த பெண் வர்த்தகர் ஒருவரின் கோரிக்கையை நிறைவு செய்வதற்காக 2000ஆம் ஆண்டு செப்ரெம்பரில் அழகுராணி ஒருவரை பொலீஸ் அதிகாரி விக்கிரமசிங்க கைது செய்ததாகவும் -

சிடிபி தலைமையகத்தில் வைத்து இந்த அழகுராணி சித்திரவதைக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஆளானதாகவும் -

சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிக்கு எதிராக ஜனாதிபதி குற்றஞ் சுமத்தியிருக்கிறார்.

லஞ்சத்தை வாங்கிக் கொண்டு தனது பதவி அதிகாரத்தை ஓர் உயர் பொலீஸ் அதிகாரி துஷ்பிரயோகம் செய்தார் என்றால் அதனை லஞ்சத் தடுப்பு ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவருவதை விடுத்து, வெறும் குற்றச்சாட்டாக ஜனாதிபதி கூறுவது நியாயமா என்று சில செய்தி ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. (உ)

## இடம்பெயர்ந்தோருக்கான

# இந்த மாதத்துக்கான நிவாரணம் இன்னமும் வழங்கப்படவில்லை

அரியாலை,ஜன.12

தைப்பொங்கல் நெருங்குகின்ற வேளையிலும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜனவரி மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

நிவாரணத்துக்குரிய உணவுப் பொருள்கள் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாலேயே நிவாரண விநியோகத்தை உரியவேளை ஆரம்பிகக முடியவில்லை என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

நிவாரண விநியோகம் தாமதமடைவது குறித்தும், இதனால் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பது பற்றியும் யாழ்.அரச அதிபருடன் தொடர்பு கொண்டு முறையிட்டிருக்கிறார் கூட்டுறவு சமாசத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய நிவாரணம் பொதுத் தேர்தலுக்கு முன்னரே இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டது.(ஐ-17)

### கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஜன.12

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் செ.கமலசேகரன் தலைமையில் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.கிருஷ்ணசாமியும் கலந்துகொள்வார். (க-86)

### பஜனை பாதயாத்திரை

யாழ்ப்பாணம்,ஜன.12

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தான வருடாந்த மார்கழிப் பஜனை யாத்திரை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

32ஆவது வருடமாக நடத்தப்படும் இந்த பஜனை ஊர்வலம் காலை 7 மணிக்கு தேவஸ்தானத்தில் இருநது ஆரம்பமாகி மூளாய் வீதி, வட்டு., மாவடிச்சந்தி ஆகிய பகுதிகள் ஊடாக சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தை அடைந்து பிற்பகல் ஒரு மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு வழக்கம்பரை அம்பாள் ஆலயம் தொல்புரம், சுழிபுரம், மூளாய் ஊடாக மீண்டும் தேவஸ்தானத்தைச் சென்றடையும். (ஐ-15)

# பாண் விநியோகிப்போர் சுகாதாரம் பேணவேண்டும்

## யாழ்.நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜன.12

சுகாதாரமற்ற முறையில் பாண் விநியோகித்து வந்த 23 பேருக்கு எதிராக யாழ். மாநகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சைக்கிளில் பாணை எடுத்துச் செல்லும் விநியோகஸ்தர்கள் சுகாதாரமற்ற முறையில் பாணை எடுத்துச் செல்வதால் பொதுமக்களுக்கு பல சுகாதாரத் தீங்குகள் ஏற்படலாம் என்று வழக்காளி, நீதிவான் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பாண் விநியோகத்தில் பின்வரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார்.

★ பாணைப் பெட்டிக்குள் வைத்து வெளியே தெரியாதவாறும், சுகாதாரமான முறையிலும் எடுத்துச்செல்ல வேண்டும்.

★ கடைகளில் கொண்டுபோய் பாணை விநியோகிக்கும்போது சுத்தமான பெட்டியில் அடுக்கிக் கொண்டு போய்க் கொடுக்கவேண்டும்.

★ பாண் விநியோகஸ்தர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதற்குரிய சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.

★ பொதுச்சுகாதார வைத்திய அதிகாரிகளால் நடத்தப்படும் பொதுச் சுகாதாரம் தொடர்பான கூட்டம், கருத்தரங்குகளில் பங்குபற்றி அவர்களது ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.

- இந்த நான்கு விதிகளையும் தவறாமல் பின்பற்றவேண்டும் எனவும், மீறுவோருக்கு எதிராக எதிர்காலத்தில் நீதிமன்றம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்றும் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா எச்சரிக்கை செய்து அவர்களை விடுதலை செய்தார். (ஐ-6-180)

### அவசரமாக இரத்தம் தேவை

யாழ்ப்பாணம்,ஜன.12

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் நோயாளி ஒருவருக்கு 'ஏ' பொஸிட்டிவ் (A+) இரத்தம் உடன் தேவை என யாழ்.ஆஸ்பத்திரி இரத்தவங்கி அறிவித்துள்ளது.

இந்த ரக இரத்தம் உள்ளோர் இன்று காலை இரத்தவங்கிக்கு வந்து இரத்ததானம் செய்தால் உதவியாக இருக்கும் என்று இரத்த வங்கி பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.(க-3)

### வசாவிளான் ம.வி. பழைய மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.12

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர்களுக்கான முக்கிய கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக பழைய மாணவர்கள் மகஜர் ஒன்றைத் தயாரிப்பது குறித்தும் -

இருநாள் விஜயமாக யாழ்ப்பாணம் வரவுள்ள புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் அந்த மகஜரைக் கையளிக்க ஏற்பாடு செய்வது பற்றியும் -

ஆராய்ந்து முடிவெடுக்கவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் பிரதிநிதி ஒருவர் கேட்டுள்ளார். (ஐ-6)

### பாட்டுக்கச்சேரி

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலய தெய்வீக இசையரங்கின் பதினொராம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் என்.வி.எம். நவரட்ணத்தின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

யாழ். செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். (க-86)

# சீனியின் விலை உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

## அரச அதிபரிடம் சமாசத் தலைவர் வற்புறுத்து

அரியாலை,ஜன.12

யாழ்.குடாநாட்டில் சீனிக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வது தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வ.கே.சிவஞானம் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

பங்கீட்டு அட்டைக்கு கட்டுப்பாட்டு விலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சீனியை வழங்குவதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

குடாநாட்டில் சீனி நிர்ணய விலை ஏதுமின்றி அதிகரித்த விலைக்கு விற்கப்படுவதால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதை நிவர்த்தி செய்வதற்கு கட்டுப்பாட்டு விலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பாவனையாளர்களுக்கு விரைவில் சீனியை வழங்க நடவடிக்கை எடுப்பதாக யாழ். அரச அதிபர் சமாசத் தலைவரிடம் தெரிவித்துள்ளார். (ஐ-17)

### சாவகச்சேரி இந்து பெற்றோருக்கான கலந்துரையாடல்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு காலை 10.30 மணிக்கு சாவகச்சேரியிலுள்ள இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்களையும் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அதிபர் ஆர்.கைலைநாதன் கேட்டுள்ளார். (க-7)

### மேலும் நால்வருக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது நடைபெற்று வருகின்ற பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு மேலும் 4பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அழைக்கப்பட்டுள்ள நால்வரும் யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் நடைபெற்று வருகின்ற நேர்முகத் தேர்வில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சகல ஆவணங்களுடனும் கலந்துகொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் பணிப்பாளர் எஸ்.கமலநாதன் அறிவித்துள்ளார்.

தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ள 4 பேரின் பெயர், விவரங்கள் வருமாறு:-

இராமச்சந்திரன் குருக்கள் ராஜேஸ்வரி (இளவாலை வடக்கு), சாமிநாதன் பிரமிளா (கரவெட்டி வடக்கு), சியாமளா நடராஜா (கோண்டாவில் கிழக்கு), சண்முகநாதன் கௌசியா (துன்னாலை, கரவெட்டி). (ம-10)


## நல்லூர் பிரதேச சபை கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையால் திருநெல்வேலிச் சந்தையில் ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் அமைப்பதற்கான வேலைக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

இவ்வேலைக்கான கேள்வி விண்ணப்பத் திகதி : 15.01.2002 தொடக்கம் 18.01.2002 வரை

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 21.01.2002 திகதி நண்பகல் 12மணி வரை

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரக் கட்டணம் - 750/=

கேள்வி வைப்புப் பணம் - 5750/=

மேலதிக விவரங்களுக்கு நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

*தலைமை அலுவலகம்,*
*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*11.01.2002* (C/20161)

க.மணிபல்லவராஜன்
(J.P.U.M.)
*தலைவர், நல்லூர் பிரதேச சபை.*


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

காரைநகர், திக்கரை, களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுப்பிரமணியம் நேற்று (11.01.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சேதுப்பிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியர்) பாசமிகு கணவரும் சரவணபவான் (ஜேர்மனி), சபாநடேசன் (டென்மார்க்), சர்வேஸ்வரன், சசிகலா, கவிதா (B.Com. Hons) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதிவதனா(ஜேர்மனி), சிவமங்கை (டென்மார்), பத்மநாதன் (ஐடியல் அக்கடமி, காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*124/1, இராசாவின்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (C/20263)

தகவல்:
மனைவி

# புலிகளுடன் தி.மு.கவுக்கு தொடர்பு ஏதுமில்லை!

## திட்டவட்டமாக மறுக்கிறார் கருணாநிதி



சென்னைஜன.12

விடுதலைப் புலிகள் அமைப்புடனான அனைத்துத் தொடர்புகளையும் தி.மு.கழகம் எப்போதோ துண்டித்து விட்டது என்று அதன் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பிரதமர் வாஜ்பாய்க்கு எழுதிய கடிதத்தில் - இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழகத்தில் தடையின்றிச் செயற்பட முன்னைய தி.மு.க. அரசுதான் காரணம் என்று குற்றஞ் சாட்டியிருந்தார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் கொலை செய்யப்பட்டது போன்ற பல செயல்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டதனால் தனது கட்சி அந்த அமைப்புடனான சகல தொடர்புகளையும் நிறுத்தி விட்டதாகவும் கருணாநிதி சொன்னார்.

தமிழக முதல்வர் பிரதமருக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிய அந்தக் கடிதத்தில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் சென்னையில் நடைபெற அனுமதிக்கக்கூடாது என்றும் எழுதியுள்ளார்.(ம)



இஸ்ரேலிய இராணுவத்தின் நடவடிக்கையை அடுத்து இஸ்ரேலிய இலக்குகள் மீது மீண்டும் தாக்கப்போவதாக ஹமாஸ் அறிவித்துள்ளது. ஹமாஸ் போராளியொருவர் சுவரில் இஸ்ரேலியப் படைக்கு எதிரான வாசகத்தை எழுதுவதைப் படத்தில் காணலாம்.

# ஆப்கான் அரசின் ஸ்திரத்தன்மையை குலைப்பதற்கு ஈரான் முயலக்கூடாது

## அமெரிக்க அதிபர் புஷ் எச்சரிக்கை

வாஷிங்ரன்,ஜன.12

ஆப்கானிஸ்தானில் புதிதாகப் பதவியேற்றுள்ள இடைக்கால அரசின் ஸ்திரத் தன்மையை ஈரான் குழப்ப முயலக் கூடாது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் எச்சரித்துள்ளார்.

எல்லை தாண்டி ஈரானுக்குள் நுழைந்துள்ள அல்கெய்டா தீவிரவாதிகளைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் புஷ் ஈரானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆப்கான் அரசின் ஸ்திரத் தன்மையை எந்த வடிவத்திலும் எந்த முறையிலும் குழப்புவதற்கு முயலக் கூடாது.

அதற்குப் பதிலாக ஆப்கானின் இடைக்கால அரசுடன் இணைந்து செயற்பட அது முயலவேண்டும். தீவிரவாதத்துக்கு எதிரான போரில் ஈரானும் இணைந்துகொள்வது அவசியம் என்றார் புஷ்.

ஆப்கான் இடைக்கால அரசுக்கு ஈரான் பெரும் சவாலாக இருப்பதாகவும் தப்பியோடிய அல்கெய்டா தலைவர்கள் பலர் ஈரானில் தஞ்சமடைந்துள்ளதாகவும் உளவுத் தகவல்கள் தெரிவித்ததையடுத்தே புஷ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்க அதிபரின் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஈரான் அடியோடு நிராகரித்துள்ளது. புஷ்ஷின் எச்சரிக்கை ஆதாரமற்றது என்று ஈரான் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

"ஆப்கான் மக்கள் தமது எதிர்காலம் குறித்துத் தாமே தீர்மானிக்க வேண்டும். அதில் ஈரான் தலையிடாது. ஆப்கானுடனான ஈரான் எல்லை இறுக்கமாக மூடப்பட்டுள்ளது. இஸ்லாமியக் குடியரசான ஈரான் ஒருபோதும் அல்கெய்டா உறுப்பினர்களுக்கோ, போராளிகளுக்கோ, பின்லேடனின் ஆதரவாளர்களுக்கோ நாட்டுக்குள் நுழைய அனுமதி வழங்கியதில்லை" என்றார் ஈரானிய அரச தரப்புப் பேச்சாளர். (ம)



### சீனப் பிரதமர் டாக்காவில்!

சீனப் பிரதமர் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாக்கா வந்து சேர்ந்தார். இன்று சனிக்கிழமை வரை இங்கு தங்கியிருக்கும் அவர் நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு பயணமாவார். -

பிரதமரின் இந்திய விஜயம் தற்போது இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தணிப்பதை நோக்கமாகக் கொண்டது அல்ல. இரு நாட்டு வர்த்தக உறவை வளர்ப்பதே இந்த விஜயத்தின் நோக்கம் என்று சீன அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களில் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் முதலாவது சீனப் பிரதமர் இவராவார்.

சீனப் பிரதமரின் இந்திய வருகையின் போது அவருக்கு எதிராக பெரும் எடுப்பிலான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு இந்தியாவில் உள்ள திபெத்தியர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# எதிர்க்கட்சியினரை பொறுமை காக்க வேண்டுகிறார் மியான்மர் அமைச்சர்

ரங்கூன்,ஜன.12

மியான்மரில் (பர்மா) எதிர்க்கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் ஐந்து பேரை அரசு விடுவித்ததைத் தொடர்ந்து அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விடயத்தில் பொறுமை காக்குமாறு மியான்மர் இராணுவ அரசின் வெளிவிவகார அமைச்சர் வின் ஆங் தெரிவித்துள்ளார்.



ஆங் சாங் சூகி

தாய்லாந்துக்கு விஜயம் செய்த வின் ஆங் அங்கு செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 800க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி ஆதரவாளர்களை அரசு சிறையில் அடைத்துள்ளது.

இவர்கள் அனைவரையும் விடுவிக்க அரசு விரும்புவதாக வின் ஆங் கூறினார். நேரம் வரும்போது எதிர்க்கட்சித் தலைவியான ஆங் சாங் சூகியும் விடுதலை செய்யப்படுவார் என்றார் அவர்.

இது குறித்து ஆங் சாங் சூகியுடன் இராணுவ அரசு இரகசியப் பேச்சு நடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரான ஆங் சாங் சூகி 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் இராணுவ அரசால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# அமெரிக்காவை இலக்கு வைத்து 100 ஏவுகணைகள் சீனாவில்!

## சி.ஐ.ஏ. வெளியிடும் தகவல்

அமெரிக்காவின் தலைநகரை இலக்குவைத்து 75 முதல் 100 வரையான ஏவுகணைகளை சீனா தனது பெருநிலப்பகுதியெங்கும் கடந்த 13 வருடங்களாக நிறுத்திவைத்துள்ளது.

- இவ்வாறு அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.தகவல் வெளியிட்டுள்ளது.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஏவுகணைகள் வடகொரியா, ஈராக், அமெரிக்கா ஆகிய நாடுகளை இலக்கு வைத்து தயாரான நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன என்று சி.ஐ.ஏ. தெரிவிக்கின்றது. அவற்றில் நவீன ரகமான மற்றும் அதி முன்னேற்றகரமான சுமார் 100 ஏவுகணைகள் அமெரிக்க இலக்குகள் நோக்கி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சி.ஐ.ஏ. கூறுகின்றது.

அதேசமயம் -

வடகொரியாவும் தனது திபோடொங் - 2 ரக ஏவுகணைகளையும் அமெரிக்கா நோக்கி நிறுத்தி வைத்திருப்பதாகவும் சி.ஐ.ஏ.தெரிவித்துள்ளது. அவை எந்த நேரமும் தாக்கத் தயாரான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# தலிபான் கைதிகள் அமெரிக்காவுக்கு!

காபூல்,ஜன.12


ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவால் கைதுசெய்யப்பட்ட 368 தலிபான் கைதிகளில் ஒரு தொகுதியினர் அங்கிருந்து அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

முதலாவது தொகுதி தலிபான் கைதிகளை ஏற்றிய விமானம் நேற்று முன்தினம் காலை கந்தகார் விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டது. கியூபாவின் அருகிலுள்ள குவன்டனாமோவில் இருக்கும் அமெரிக்க கடற்படைத் தளத்தில் உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்கு அந்த விமானம் தரையிறங்கிச் சென்றதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்படும் தலிபான்கள் அனைவரும் கொலைக் குற்றங்களில் தொடர்புபட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதிகளின் இடமாற்றம் குறித்து அமெரிக்கா உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை.

கொண்டு செல்லப்பட்ட தலிபான் கைதிகளில் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா சந்தேகநபர்களும் அடங்கியுள்ளனர். இவர்களை தீவிரமாக விசாரிப்பதன் மூலம் பின்லேடன் குறித்தும் அல்கெய்டா அமைப்பின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்தும் தகவல்களைப் பெறமுடியும் என்று அமெரிக்கா நம்புகின்றது. (ம)



தலிபான் கைதிகள்

# ஹொங்கொங்கில் குடியேறிய சீனர்களை சொந்த இடங்களுக்குத் திரும்ப உத்தரவு!

ஹொங்கொங்சிற்றி,ஜன.12

ஹொங்கொங்கில் குடியேறிய சீனப் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்று ஹொங்கொங் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனால் தமது வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும் என்ற கனவுகளுடன் ஹொங்கொங்கில் குடியேறிய 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனா கொம்யூனிஸ ஆட்சியின் கீழ் உள்ள நாடு. ஆனால் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த ஹொங்கொங்கில் ஜனநாயக நிர்வாகம் நடைபெறுகின்றது. 1999 ஆம் ஆண்டு ஹொங்கொங்கை பிரிட்டன் சீனாவிடம் கையளித்தது.

ஹொங்கொங்கில் கொமயூனிஸ ஆட்சியைப் பிரகடனப்படுத்துவதில்லை என்றும் -

ஒரே நாடாக இருப்பினும் இரு வேறு நிர்வாக அலகுகளுடன் இணைந்திருப்பது என்றும் -

பிரிட்டனுடன் ஒப்பந்தம் செய்த பின்னரே ஹொங்கொங்கை சீனா தன்னுடன் இணைத்துக்கொண்டது.

இதனால் ஹொங்கொங் சீனாவுடன் இணைந்த பின்பும் அங்கு ஜனநாயக நிர்வாகமே நடைபெற்றுவருகின்றது. இதனால் கவரப்பட்ட பல ஆயிரக்கணக்கான சீனர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கான விஸாவைப் பெற்றுக்கொண்டு வந்து ஹொங்கொங்கில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். இவ்வாறு ஏற்கனவேயும் பல சீனர்கள் ஹொங்கொங்கில் குடியேறியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்து ஹொங்கொங் உயர்நீதிமன்றத்தின் முன்பாக கூடி நின்ற சீனர்கள்.

இவர்களை ஹொங்கொங்கை விட்டு வெளியேறுமாறு ஹொங்கொங் அரசு உத்தரவிட்டது. ஆனால ஹொங்கொங் சீனாவுடன் இணைந்திருப்பதால் தாம் அங்கு வசிப்பதற்கு உரிமையுடையவர்கள் என்று குடியேறிய சீனர்கள் வாதாடினர். இது தொடர்பாக நீண்ட நாள்களாக வழக்கு நடந்தது.

இறுதியாக ஹொங்கொங் உயர் நீதிமன்றம் கடந்த வியாழனன்று தனது இறுதித் தீர்ப்பை வெளியிட்டது. ஹொங்கொங் சீனாவுடன் இணைந்ததாலும் அங்கு சட்டவிரோதமாக குடியேறிய சீனர்கள் உடனடியாக சீனப்பெருநிலப்பரப்புக்குத் திரும்ப வேண்டும் என்று அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 300 பேர் மட்டுமே தொடர்ந்து ஹொங்கொங்கில் தங்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு ஹொங்கொங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தீர்ப்பு வெளியான பின்னரும் ஹொங்கொங்கை விட்டு வெளியேறப்போவதில்லை என்று பலர் கூறிவருகின்றனர்.

"நான் நிச்சயமாகத் திரும்பிச் செல்லமாட்டேன்" என்றார் சீனாவின் பியூஜியா மாகாணத்தைச் சேர்ந்தவரான டின் மிங் குவா (வயது 42). "இது மிக மோசமான நிலை. எனது குடும்பம் இங்கே இருக்கின்றது. வயதான பெற்றோர் இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் அழைத்துச் சென்று சீனாவில் வைத்து என்னால் பராமரிக்க முடியாது" என்று அவர் மேலும் கூறினார்.

இது ஒரு உணர்வுபூர்வமான விடயமாக இருப்பதால் அதிகாரிகள் மிக அவதானத்துடனேயே நடந்து வருகின்றனர். "நாம் இப்பொழுது தீர்ப்பை முழுமையாகப் படித்துப் புரிந்துகொள்ள முயற்சித்து வருகின்றோம். தீர்ப்பின் வழியில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்போய் அது விபரீதத்தில் முடிந்துவிடக்கூடாது" என்று அரச தரப்புப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த விடயம் குறித்து அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடம்பெயர்ந்து ஹொங்கொங்கில் வாழும் சீனர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுப் பின்னிரவில் பேச்சு நடைபெற இருந்தது. (ம)

## தர்மசாஸ்தா விஷு தர்சன பூஜை

சபரிமலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தர்மசாஸ்தா (சபரிமலை ஐயப்பனின்) மகர விஷு ஜோதி தர்சன நன்னாளாகிய தைப்பொங்கல் தினத்தன்று மாலை யாழ்ப்பாணம் வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தில் தீபஜ்ஜோதியில் சபரி வார தர்மசாஸ்தா விசேஷ பூஜை நடைபெறத் திருவருள் கூட்டிவைத்திருக்கின்றது. ஆகவே ஐயப்ப பக்தர்கள் அனைவரும் ஆலயத்துக்கு சமுகந்தந்து ஐயப்பன் திருவருள் பெற்றேகுமாறு வேண்டப்படுகின்றனர்.

### நிகழ்ச்சி நிரல்

பிற்பகல் 1.30 மணிக்கு பஜனை

3 மணிக்கு பூஜை ஆரம்பமாகும்.

தொடர்ந்து தீபாராதனை நடைபெற்றும்

பிரசாதம் வழங்கப்பெறும்.

\- பிரதமகுரு சிவஸ்ரீ

சாமியே! சரணம் ஐயப்பா! கி.நாராயண குருக்கள்.

(6994)

## புவியியல் கழகம் நடத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்.பல்கலைக்கழக புவியியற் கழகம் நடத்தும் கருத்தரங்கு தொடர் - 1 எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 'பல்கலைக்கழக மாணவர் தெரிவில் 'Z' கணிப்பீட்டு முறை' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக பொருளியற்றுறைத் தலைவர் வீ.பி.சிவநாதன் கருத்துரை வழங்குவார். (ஐ-4)

## திருவாசக விழா

யாழ்ப்பாணம், ஜன.12

இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் திருவாசக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கழகத்தின் தலைவர் க.தர்மநாயகம் தலைமையில் சிவகாமி அம்மன் அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவகாமி அம்மன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார். 'திருவாசகமெனும் தேன்' எனும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ம-10)

## எழுதுவினைஞர் 6 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணம் கல்விவலயத்தில் அமைய எழுதுவினைஞர்களாகக் கடமையாற்றி வந்த 6 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த 6 பேரின் பெயர்களும் வருமாறு:-

சிவஞானம் அன்ரனிகா நிரஞ்சனா, திருமதி சூரியா ஸ்ரீதரன், நிக்கலஸ் யூட் சதீஸ்குமார், உமாராணி சிங்கராஜரட்ணம், விஜயலக்ஷ்மி மகேந்திரன், திருமதி கிருபவாணி சரணபவன். (ம-10)


தைப்பொங்கல் வரை மட்டும்

5% இல் இருந்து 25% வரை

சிறப்புத்தள்ளுபடி

அழகுசாதனப்பொருட்கள்,வர்ணப்படங்கள்,லேஸ்வகைகள், அன்பளிப்புபொருட்கள்,மணிக்கூடுகள்,சென்ற்வகைகள், Fevicryl & Acron Paint Items, வாழ்த்துமடல்கள், எவர்சில்வர்பொருட்கள்,பிளாஸ்டிக்பொருட்கள், பட்டின் பக்கின் கவறிங்செய்தல் மற்றும்

CDயில் இருந்து CDக்கு வீடியோ,ஓடியோ பதிவுகள் செய்து பெற்றிடவும்

சந்தியா மல்ரி சென்ரர்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். | பிரதானவீதி, பண்டத்தரிப்பு.

(எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை)



யாழ்.நகரில் புதிய உதயம்....

Center for Computer Studies CC

Computer College

கணினிக் கல்லூரி

337, Kasthuriyar Road, Jaffna.

Telephone & Fax : 021-3497
E-Mail: Collegeofcomp@bharatmail.com

Entertainment Studies for O/L Students

O/L மாணவர்களுக்கான Multi Media, Animation, மற்றும் Graphics பயிற்சி வகுப்புக்களுடன் Computer Games, Internet & E-Mail பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.



❖ கணினி மூலம் Type Setting & Printing
❖ கணினியில் படம் வரைதல் (MS Paint)
❖ கணினி மூலம் வீடியோ (Multimedia)
→ Media Player
→ Cool 3D
→ Ifilm Edit
❖ கணினி விளையாட்டுக்கள் (Computer Games)

குறைந்த கட்டணம்

பதிவுகள் இலவசம். கூடிய செயல்முறை வகுப்புக்களுடன் போதிய விளக்கக் குறிப்புகள் வழங்கப்படும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம் 14 - 01 - 2002 3 p.m

Ms OFFICE XP - 2002 | GIF ANIMATOR
Adobe Pagemaker | WEB Designing
Adobe Premire | Adobe Photoshop
Corel Draw | Cool 3D

மேலதிக விபரங்களுக்கு :
Director
Computer College
337, Kasthuriyar Road,
Jaffna.


இந்து சமய கலாசார அமைச்சின் அனுசரணையுடன்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
நடத்தும்

## பொங்கல் விழா - 2002

### யாழ்.மாவட்டம்

நாள் :- 14.01.2002 திங்கட்கிழமை

இடம் :- ❖ நல்லூர் கந்தசுவாமி கோயில் (பொங்கல், பூஜை வழிபாடு)
❖ யா/நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயம் (பாரம்பரிய விளையாட்டுக்கள்)
❖ நல்லூர் துர்க்கா மணிமண்டபம் (கலைநிகழ்வுகள்)

தலைவர் :- திரு.து.வைத்திலிங்கம்
*(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)*

பிரதம விருந்தினர் :- உயர்திரு.தி.மகேஸ்வரன் அவர்கள்
*(கௌரவ அமைச்சர், இந்து கலாசார அமைச்சு)*

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வருக வருக என அன்போடு அழைக்கின்றோம்..

*செயலகம்,*
*விழாக்குழுவினர்,*
*யாழ்ப்பாணம்.*

### நிகழ்ச்சி நிரல்கள்

**காலை நிகழ்வுகள்**

7.30 பொங்கல் பூஜை வழிபாடு
நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

8.00 பாரம்பரிய விளையாட்டுக்கள்
*(நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலய விளையாட்டு மைதானம்)*

சிலம்பு - வடமலை இராசதுரை குழுவினர், வலி.வடக்கு
கரலாக்கட்டை - பருத்தியூர் மகாதேவா குழுவினர்
கபடி - தெல்லிப்பழை பிரிவு விளையாட்டு வீரர்கள் எதிர் யாழ்ப்பாணப் பிரிவு விளையாட்டு வீரர்கள்.
தாச்சி - நவாலி தெள் றஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்.

**மாலை நிகழ்வுகள்** - நல்லூர் துர்க்கா மணிமண்டபம்

2.00 மங்கள விளக்கேற்றல்

2.10 தமிழ்த்தாய் வாழ்த்து
*(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்)*

2.20 மங்கள இசை
என்.ஆர்.கே.இரத்தினகுமார் குழுவினர்

2.40 தலைமையுரை
திரு.து.வைத்திலிங்கம்
*(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)*

2.50 யாழ்.பல்கலைக்கழக நுண்கலைக்கழகம் வழங்கும் பொங்கல் இசை-நடன விருந்து

| | | |
|---|---|---|
| பாட்டு | - | திரு.ந.வி.மு.நவரத்தினம் |
| வயலின் | - | திரு.உ.இராதாகிருஷ்ணன் |
| கடம் | - | திரு.சி.மகேந்திரன் |
| கஞ்சிரா | - | திரு.எம்.சிதம்பரநாதர் |
| முகர்சிங் | - | திரு.எஸ்.ரமணன் |
| தம்புரா | - | திரு.ந.பரந்தாமன் |

3.20 நடனவிருந்து
நெறியாள்கை திருமதி சிறுஷாந்தி இரவீந்திரா
இறைபுகழ் ஆடல்
பொங்குபுகழ் நாட்டுவளம்
சுதனகுதூகல ஆடல்

4.20 பிரதமவிருந்தினர் உரை
இந்து சமய கலாசார அமைச்சர்
கௌரவ தி.மகேஸ்வரன் அவர்கள்

4.30 கவியரங்கம்
"தைமகளே நீ பிறந்து தமிழருக்கு என்ன செய்வாய்"
தலைவர் மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தம்
பங்கேற்கும் கவிஞர்கள்.

| | |
|---|---|
| கிராமத்துக்குயில் | ஒலியாரெஜீபன் |
| கவிஞர் | த.ஜெயசீலன் |
| கவிஞர் | ச.முகுந்தன் |
| கவிஞர் | கு.புரந்தரன் |
| கவிஞர் | தீ.திருக்குமரன் |
| கவிஞர் | த.ஜெசீதன் |

5.10 நன்றியுரை
திரு.பி.செந்தில்நந்தனன்,
(பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

5.15. பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் வழங்கும் "வள்ளி திருமணம்" இசை நாடகம். (C-2023?)

உதயன்

## இந்தியத் தரப்பின் தார்மீகப் பொறுப்பு

"இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட நோர்வே அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை இந்திய அரசு மேலும் வலுவுள்ளதாக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பைக்கொண்டிருக்கின்றது."

- இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமருக்கு இந்துசமயப் பேரவை அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு கோரப்பட்டிருக்கின்றது.

இந்திய நாடு தனது எல்லைக்கு அப்பால் இருந்துவரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா ஆத்மீக வீரத்துடன் உயர்ந்து நிற்க பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து - வாழ்த்துக் கூறி - இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கின்றது இந்துசமயப் பேரவை.

"எழுமின்! விழிமின்!" என்று தனது பாரத தேசத்துக்குத் தைரியத்தையும் எழுச்சியையும் ஊட்டிய சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி தினம் இன்றாகும். அதையொட்டி இன்றுமுதல் அடுத்த ஒருவார காலத்துக்கு ஆன்மீக எழுச்சி வாரத்தை ஈழத் தமிழர்கள் அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் இந்தப் பின்னணியில்தான் இந்துத்துவ கொள்கைப் பிடிப்புள்ள பாரதிய ஜனதாக் கட்சியிடமும் அந்தக் கட்சியின் தலைமையிலான அரசிடமும் ஈழத் தமிழர் சார்பில் இந்துசமயப் பேரவை இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது.

முன்னர் இந்தியாவில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசுகள் ஈழத் தமிழர் விவகாரத்தில் தமது நாட்டின் பிரதேச வல்லாதிக்க நலனை மட்டும் முன்னிறுத்தி எடுத்த நடவடிக்கைகளினால் - ஈழத் தமிழரின் விடுதலை வேட்கையை அடக்க, ஒடுக்க எடுத்த முயற்சியினால் - இந்தப் பிராந்தியத்தில் தமது சகோதரர்களாகிய ஈழத் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக - தமது முன்னைய தவறான செயற்பாடுகளுக்காக - பிராயச்சித்தம் செய்வதற்கு இந்தியத் தரப்புக்கும் மக்களுக்கும் நல்லதொரு வாய்ப்பு இப்போது கிட்டியிருக்கின்றது.

பெரும்பாலும் மத, கலாசாரப் பின்னணிகளாலும், இனத்தாலும் இந்திய - குறிப்பாக தமிழக - மக்களோடு பின்னிப் பிணைந்த ஈழத் தமிழர்களுக்கு பிராந்திய வல்லாதிக்க மமதையின் பின்னணியில் இழைக்கப்பட்ட தவறுக்கு தார்மீக ரீதியில் நிவாரணம் வழங்கும் சந்தர்ப்பம் இந்தியாவில் தற்போது ஆட்சியிலிருக்கும் பாரதிய ஜனதா அரசுக்குக் கிட்டியிருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, உரியமுறையில் செயற்படுமாறு - அந்த அரசின் தார்மீகக் கடப்பாட்டை - உணர்த்துகின்ற பொறுப்பு இந்துசமயப் பேரவைக்கு உண்டு.

இலங்கை அரசும் புலிகளும் சமாதானப் பேச்சில் ஈடுபடுவதற்கு நோர்வே எடுத்துவரும் முன்முயற்சிகளைக் குழப்பாமல் மேலும் வலுவுள்ளதாக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு என்பதனையும் -

இச்சமாதானப் பேச்சை நடத்துவதற்கான இடவசதியை வழங்குமாறு விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ள இந்நிலையில், ஆத்மீகப் பாரம்பரியம் நிறைந்த இந்தியா அதற்கு சகலவிதமான உதவிகளையும் வழங்கவேண்டும் என்பதையும் -

இந்துப் பேரவை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினையால் பெரிதும் அழிந்து, பாதிப்புக்குள்ளாகிக்கொண்டிருப்பவர்கள் தமிழர்களே. அவர்களில் பெரும்பாலானோர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்துக்களின் புனித வழிபாட்டுத் தலங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன; அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்துத்துவ கொள்கையில் விடாப்பிடியாக இருக்கும் இந்திய அமைப்புகள், கட்சிகள், ஸ்தாபனங்கள் இதுவிடயத்தில் சிரத்தைகொள்வதும், அழிந்து கொண்டிருக்கின்ற தமது சகோதரர்களுக்காகச் செயலாற்றும்படி தமது அரசை வற்புறுத்துவதும் அவற்றின் வரலாற்றுக் கடப்பாடாகுகின்றது.

# செம்மணி இந்து மயானத்தை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

வலி.கிழக்கு,ஜன.12

நல்லூர் செம்மணி இந்து மயானப் புனரமைப்பு வேலைக்கென வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 5லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மயானத்தைப் புனரமைப்பதற்கென முதற்கட்டமாக இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி மயானத்தின் அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிமூலம் மயானத்தின் மடஅறை திருத்தி அமைக்கப்படும். அதற்கு கதவுகள் புதிதாகப் போடப்படவுள்ளன.

அத்துடன் மயானத்தைச் சுற்றி கம்பி வேலிகள் இடப்படும். மடத்தில் ஆள்கள் தங்கிநிற்க வசதியாக இருக்கைகள் அமைக்கப்படவுள்ளன.

செம்மணி இந்து மயானத்தின் அபிவிருத்திச் சபையின் செயலாளர் வ.பரமசிவம் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். (ஐ-180)

## நாட்டு நடப்பு

### ஒரு லீற்றர் தா!

**குடும்பட்டை கூப்பனட்டை குடியிருப்பாளர் அட்டை**
**அடுக்கியொன்றாய் நானுனக்கு நல்கிடுவேன் - நடுநடுங்க**
**பொல்லூண்டும் கிழடாக பொழுதெல்லாம் நின்றதற்கு**
**இல்லையெனாது ஒரு லீற்றர் தா!**

*- விகடகவி.*

## கசிப்பு வழக்கில் பெண்ணுக்குச் சிறை

தென்மராட்சி,ஜன.12

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதற்காக நான்காவது தடவையாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பெண்ணொருவருக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பதினான்கு மாத சிறைத்தண்டனை விதித்தார். அல்வாய் வடக்கு, முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த இந்தப் பெண்ணின்மீது சுமத்தப்பட்ட மூன்று வெவ்வேறு குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் 14 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

20 டிராம் கசிப்பு வைத்திருந்ததற்காக நான்கு மாதங்களும், 2 ஆயிரத்து 160 டிராம் கோடா வைத்திருந்ததற்காக எட்டு மாதங்களும், கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் வைத்திருந்தமைக்காக இரண்டு மாதங்களும் தனித்தனியாக தண்டனைகள் விதிக்கப்பட்டு அவற்றை மொத்தமாக அனுபவிக்கவேண்டுமென நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-117)

## படையினர் வெளியேறினர்

குருநகர்,ஜன.12

குருநகர் கடற்கரைவீதியில் ஐந்து மாடிக்கு முன்னால் அமைந்துள்ள யாழ்மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்கள். (ஐ-51)

### 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கவனஈர்ப்புப் போராட்டம்

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல் கவனஈர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

பல்கலைக்கழகச் சமூகம் ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டத்தில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகப் பிரதான வாயிலில் கூடிய இவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அரசாங்கம் மோதல் தவிர்ப்பை நிரந்தர யுத்தநிறுத்தமாக அறிவிக்கவேண்டும் - வடக்குக் கிழக்கில் மீன்பிடித் தடையை முற்றாக நீக்கவேண்டும் -

விவசாயத் தடை நீக்கப்படுவதுடன், விவசாயப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கவேண்டும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தி தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் முன்னெடுக்கவேண்டும் -

'தினக்கதிர்' பத்திரிகை அலுவலகம் மீதும், பத்திரிகையாளர் சிவராம்மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் -

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தினால் இந்தக் கவனஈர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. (ஐ)

# சிறுவர் உரிமைகள் பற்றிய போட்டிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.12

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட சிறுவர்களுக்கிடையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான போட்டிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கட்டுரை, ஓவியம், சம்பாசித்தல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் யாவும் கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு மற்றும் அங்கவீனர்பிரிவு என 4 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 16ஆம் திகதி தீவக வலயத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கான போட்டிகள் வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் -

எதிர்வரும் 17ஆம் திகதி வலிகாம வலயத்தில் உள்ள சிறுவர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

யாழ்.வலய சிறுவர்களுக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் -

எதிர்வரும் 18ஆம் திகதி வடமராட்சி வலய சிறுவர்களுக்கு வட. இந்து மகளிர் கல்லூரியிலும் -

போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் பயிற்சியாளருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-6)




தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்தவர்களின் 28ஆவது நினைவு அஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.முற்றவெளியில் நடைபெற்றது.

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு முன்பாக அங்குள்ள நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்.மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண.பிதா சி.ஜெயக்குமார் மலரஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம். அருகில் புளொட் அமைப்பின் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் அன்ரன் பொன்னையாவும் காணப்படுகிறார்.

*(படம்: பொ. இராஜேஸ்வரன்)*

# கூட்டுறவுச் சங்கக் கிளைகளை மீண்டும் திறக்கக் கோரிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தின் பல பகுதிகளில் பெருமளவு மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து இப்பகுதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளைத் திறக்குமாறு யாழ்.அரச அதிபர் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோரிடம் அந்தந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

சரசாலை, மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு, நுணாவில், கைதடி நுணாவில், மீசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே ப.நோ.கூ. சங்கக் கிளைக் கடைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரியுள்ளனர்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் அண்மையில் மீசாலை புத்தூர்ச் சந்தியில் கிளைகடை ஒன்றினை ஆரம்பித்துள்ளனர். (ஐ-117)

## நாளை

மார்கழி 29
ஞாயிற்றுக்கிழமை
(13-01-2002)
திதி : அமாவாசை
முன்னிரவு 7.16 வரை.
நட்சத்திரம்: பூராடம்
பிற்பகல் 2.16 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம் : 9.33 - 11.03
ராகுகாலம் : 5.03 - 6.33
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பழிவாங்குதல் வீரமன்று ~
ஆனால் பொறுப்பதே வீரம்.

# கலைஞன் எப்போதும் புலன்களின் கதவைத் திறந்தே வைப்பான்

### நூல் வெளியீட்டு நிகழ்வில் உரை

கலைஞன் தனது புலன்களின் கதவுகளைத் திறந்தே வைத்திருப்பான். புலன்களின் மூலம் விடயங்களைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்டு அவற்றை பெரிதாக்கி வெளிவிடுவான்.

- இவ்வாறு குறிப்பிட்டார் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன்.

புதுமைலோலன் எழுதிய 'புதுமைலோலன் சிறுகதைகள்' நூலின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிறன்று தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது. புத்தொளி ந. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

எழுத்தாளன் தான் உள்வாங்கும் விடயங்களைப் பெரிதாகக் காட்டுவான். இத்தகைய பெரிதாக்கங்கள் சிலவேளைகளில் படைப்பை இரசிக்க முடியாததாக்கிவிடும். வாழ்க்கையை நல்ல முறையில் எடுத்துச்சொல்லும் படைப்புகளே நிலைக்கும். புதுமைலோலனுக்குள் அற்புதமான கலைஞன் மறைந்திருக்கின்றான். அவரது கதைகளில் அழகியல் அம்சங்கள் மேலோங்கி இருக்கின்றன - என்றார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய சிற்பி சிவசரவணபவன் தனதுரையில் -

வீட்டுக்குள் இருந்து ஜன்னலூடாகப் பார்ப்பது போன்றது சிறுகதை என்பார்கள். இவரது சிறுகதைகள் உருவத்தைப் பொறுத்தவரை சிறுகதை இலக்கணத்துக்குள் அமைந்தவை. பதின்மூன்று சிறுகதைகளில் ஏழு கதைகள் புகையிரதம் சம்பந்தமானவை. 1952இல் சுதந்திரனில் முதலாவது சிறுகதையை எழுதினார். இவரது கதைகளில் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை நாம் தரிசிக்கலாம் - என்றார்.

மதிப்புரை நிகழ்த்திய சொக்கன் தனதுரையில் -

இவரது சிறுகதைகள் குடும்ப மரபுகள், சமுதாயக் கட்டுக்கோப்புக்குள் நிற்பன. அறிஞர் அண்ணாவின் பேச்சுத் தொனி இவரது சிறுகதைகளில் பிரதிபலிக்கிறது. அது மட்டுமன்றி இவர் தனது கதைகளில் செந்தமிழையே பயன்படுத்தியுள்ளார். தமிழாசிரியர்கள் மரபுக் கட்டுப்பாட்டுக்குள் நிற்கிறார்கள். இவரும் அதற்கு விதிவிலக்கல்ல - என்று குறிப்பிட்டார்.

நூலின் முதற்பிரதியை எழுத்தாளர் சிற்பியிடமிருந்து மூத்த எழுத்தாளர் வரதர் பெற்றுக்கொண்டார். எழுததாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் மதிப்புரை நிகழ்த்தினார். (ஐ-27)

## விவிலிய டிப்ளோமா பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் விவிலிய டிப்ளோமா கற்கைநெறி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்மறைக் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த கற்கைநெறி பிரதி சனிக்கிழமைகளில் காலை 9.15 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரை இடம்பெறும்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கிறிஸ்தவத்தை ஒரு பாடமாக எடுத்தவர்கள் இந்தக் கற்கைநெறியைத் தொடரமுடியும் எனவும் -

6 மாதம் நடைபெறவுள்ள கற்கை நெறியின் இறுதியில் நடைபெறும் பரீட்சையின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் -

ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-6)

# இரண்டாம் ஆண்டு நினைவுத் துயர்

| தோற்றம் | | இழப்பு |
|---|---|---|
| 28 | | 05 |
| - | | - |
| 02 | | 01 |
| - | | - |
| 1931 | | 2000 |



## திருமதி தனலக்குமி கதிரவேல்

**திதி: 12.01.2002**

ஆண்டிரண்டு சென்றும் பூண்டுள துயர்நிலையில்
கோலக்கதிர்மனை விளக்கு கலங்கரைப் பேரொளி சங்கத்தலைவி
வேண்டும் சேவையால் உயர்ந்து பொன்னாடைபூண்ட சொல்லின்செல்வி
கணவனது பேறுவழில் பெருவாழ்வுத் திருமணத்தாலியும் பெற்று
முக்காலமறியும் முதிர்சோதிட ஆசானாய் பலனுரைத்த பங்கயச்செல்வி
மக்களில் நலிவுற்ற நங்கையர் நலமாய் வாழவழிகாட்டிய தொண்டுச்செல்வி
நாடுபோற்ற எம்நலம் காத்து ஏதிலாச்சுகம் பேணும்
இல்லத்தலைவியாய் எம் இதயங்களில் என்றும் இருப்பாய்.

*இலக்குமி இல்லம், அல்வாய்.* (96895) - குடும்பத்தினர்.



# அந்தியேட்டிக் கிரியைகளும் சபிண்டீகரண அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 | | 14 |
| ☆ | | ☆ |
| 08 | | 12 |
| ☆ | | ☆ |
| 1944 | | 2001 |



அமரர்

## சங்கரப்பிள்ளை நடராசா

*இறைவன் திருவடி நிழலில் நித்திய ஆறுதல் தேடிய அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (13.01.2002) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி மற்றும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சகோதரர்கள்:* ச.கணேசன், ச.சிறிஸ்கந்தன், ச.குணநாயகம்.
*சகோதரிகள் :* திருமதி வள்ளி சூரியகுமாரன், திருமதி கமலா கணபதிப்பிள்ளை, திருமதி மதுரை பத்மநாதன், திருமதி திலகவதி வைரவநாதன்.
*மைத்துனர் :* இ.பத்மநாதன்.

*ஓராங்கட்டை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.* (C/19037)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 12 | | 13 |
| - | | - |
| 12 | | 12 |
| - | | - |
| 1966 | | 2001 |



## அமரர் இராசரத்தினம் நேசகுமார் (தாசன்)

எம்மை நல்வழி நடத்தி வாழவைத்தீர்!
இன்று விழி கலங்கி அழவைத்துச் சென்று விட்டீர்!
உம்மை நினைந்து நாம் உருகியே துடிக்கின்றோம்
ஆத்மா சாந்தி பெறுக ஆண்டவன் திருவடியில்!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சூராவத்தை, சுன்னாகம்.* (96871) தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.


## 'தாயகம்' விமர்சன நிகழ்வு

சுன்னாகம், ஜன.12

'தாயகம்' சஞ்சிகையின் வெளியீடு மற்றும் விமர்சன நிகழ்வு நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன் கவிதைகள் தொடர்பாகவும், ஈ.குமரன் சிறுகதைகள் தொடர்பாகவும், செல்வி றஜனி செல்வரத்தினம் கட்டுரைகள் தொடர்பாகவும் விமர்சன உரைகளை நிகழ்த்துவர். (ஐ-27)

## சுகாதார படக்காட்சி

சுன்னாகம், ஜன.12

சுகாதார விழிப்புணர்வை மாணவா மத்தியில் ஏற்படுத்தும் முகமாக ஏழாலை மற்றும் கந்தரோடைப் பகுதிகளில் சுகாதார விவரணப் படங்கள் காண்பிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் ஆகியவற்றில் இப்படங்கள் காண்பிக கப்பட்டன.

சுன்னாகம் பொதுச் சுகாதார பரிசோதகர் ம.பத்மகுமார், ஏழாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். பார்த்தீபன் ஆகியோர் விவரணப் படங்கள் குறித்த கருத்துரைகளை வழங்கினர். மாணவர்களும், பெற்றோரும் இவற்றைப் பார்வையிட்டனர்.(ஐ-27)

## வீதி திருத்தப்பட்டது

சுன்னாகம், ஜன.12

சுன்னாகம் பழைய பொலீஸ் நிலைய வீதியில் விவசாய வீதியாக இருந்த மண்பாதை வலி.தெற்குப் பிரதேச சபையால் தார் போட்டுத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த இவ்வீதி கே.கே.எஸ். வீதியிலிருந்து ஆரம்பித்து ரயில் பாதை வரை திருத்தம் செய்யப்பட்டு, முருகேச பண்டிதர் வீதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. (ஐ-27)

## நூல் அறிமுக விழா

சுன்னாகம், ஜன.12

எழுத்தாளர் சாந்தன் எழுதிய 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்', ஆங்கில நூலான 'அவர்களின் உலகங்களில்'(In Their Own Worlds) ஆகிய இரு நூல்களின் அறிமுக அரங்கு இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடத்தும் இந்நிகழ்வுக்கு தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா தலைமை வகிப்பார்.

வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளையும், நூல் அறிமுகவுரையை பேராசிரியர் சபா.ஜெயராசாவும் நிகழ்த்துவர்.

விமர்சன உரைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ந.ஜீவேஸ்வரா, மொழியியற்றுறை விரிவுரையாளர் அருட்திரு. ஜெயசீலன் அடிகள், பொருளியற்றுறைத் தலைவர் வி.பி.சிவநாதன், புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர். (ஐ-27)

## அந்தணர்கள் கௌரவிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று பட்டம் பெற்ற அந்தணர்களை 'நியந்திரி' அமைப்பின் சார்பில் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

'நியந்திரி' அமைப்பின் தலைவர்-யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறும். (ஐ-152)


**SPOKEN ENGLISH with GRAMMAR**

By: **Mr.M.A.HARI**

புதிய பிரிவு ஆரம்பம்
இன்று (12.01.2002)சனி
1.00 p.m.
sat. sun. } 1.00– 2.00 p.m.

**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம். (96948)



# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



12-01-2002

## தியாகராசா திலோசன்

பண்டத்தரிப்பைச் சேர்ந்த
நெடுந்தூர ஓட்ட வீரன்
தியாகராசா - ஸ்ரீதேவி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

## திலோசன்

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (12.01.2002) சனிக்கிழமை பண்டத்தரிப்பில் உள்ள தனது வீட்டில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

திலோசனை அன்பு அப்பா, அம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.* (C/20197) தகவல்: செ.வசந்தன்.



# இன்று பாராட்டு விழா



## உயர்திரு. செ.கு.சண்முகநாதன்

*(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.)*

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த காலத்தில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவியேற்று கூட்டுறவு அமைப்புக்களைப் புனரமைத்து, புத்துயிர் கொடுத்து கூட்டுறவு அமைப்புக்கென ஒரு வங்கியை அமைத்து, கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமையை மேம்படுத்தியதற்காகவும், கூட்டுறவுப் பணியாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியமைக்காகவும் அன்னாரின் சேவையைப் பாராட்டி, பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச்செல்லும் அவரை வாழ்த்தி இன்று (12-01-2002) சனிக் கிழமை எமது சங்கத் தலைமையகத்தில் பாராட்டு விழாவினை நடத்திச் சிறப்பிக்கின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், ஊழியர் நலன்புரிச் சங்கம்.
(96953)



# 4ஆம் ஆண்டு நினைவலைகள்



## செல்வன் யோகநாதன் சுகந்தன்

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 23-05-1979 | 27-01-1998 |

திதி: சதுர்த்தசி
12-01-2002

நான்காண்டுகள் சென்றாலும்
நாமிருக்கும் வரை
உன் நாமம் எம் நெஞ்சில்
நிலைத்து நிற்கும்.

*உன் ஆத்ம சாந்திக்காக வீரபத்திரரைப் பிரார்த்திக்கும்:*
அப்பா, அம்மா, சகோதரிகள்.

*தெற்பேலி, மிருசுவில்.* (96954)



# 29ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 22 | | 15 |
| - | | - |
| 03 | | 12 |
| - | | - |
| 1962 | | 2001 |



## அமரர் மாணிக்கம் பரமானந்தம் (பரா)

12.01.2002

நாள்கள் இருபத்தொன்பது ஆகிவிட்டதே
எம் மனங்களும் இன்னும் ஆறவில்லையே உன் நினைவால்.

அன்னார் இந்தியாவில் எமைப் பிரிந்த துயரச் செய்தியறிந்து நேரிலும், வெளிநாடுகளிலுமிருந்து தொலைபேசி மூலம் எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*43, முருகமூர்த்தி வீதி, வண்.வட மேற்கு, யாழ்ப்பாணம்.* (96909)
தாய், சகோதர சகோதரிகள், மைத்துனர், மருமக்கள், பெறாமக்கள்.

# சாவகச்சேரி இந்துவை உடன் மீளத் திறக்குக!

## இல்லையேல் போராட்டம் நடத்தப்படும் என்கின்றனர் பெற்றோர்

தென்மராட்சி,ஜன.12

சாவகச்சேரி இந்துக் கல்லூரியை அதன் சொந்த இடத்தில் மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பத்துத் தினங்களுக்குள் கல்லூரியை ஆரம்பிக்காத பட்சத்தில் கல்வி வலய அலுவலகம் உட்பட கல்வித் திணைக்கள நிறுவனங்கள் முன்பாக மறியற்போராட்டம் நடத்தவிருப்பதாகக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மகஜர் மூலம் அறிவித்துள்ளனர்.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக அகதி முகாம்களிலும், வீடுகளில் பல குடும்பங்கள் ஒன்றாகவும் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தற்போது தங்கியுள்ள பகுதிகளின் சூழல் எமது பிள்ளைகளின் கல்விக்கு மேம்பாடான தராதரத்தைப் பெறுவதற்கும் உகந்த நிலையில் இல்லாதுள்ளது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளும் அரசும் நல்லெண்ண நடவடிக்கையாக யுத்தநிறுத்தத்தைப் பிரகடனம் செய்து மக்கள்மத்தியிலே சமாதானத்திற்கும் அமைதிக்குமான ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இக்காலகட்டத்தில் தென்மராட்சியில் பல பாடசாலைகள் மீள இயங்கத் தொடங்கியுள்ளன. சாவகச்சேரி இந்துக் கல்லூரி இன்னமும் ஆரம்பிக்காதிருப்பதால் இக்கல்லூரியின் மாணவர்களைக்கொண்ட சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியவில்லை. எனவே கல்லூரியை எதிர்வரும் பத்து நாள்களுக்குள் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இல்லையேல் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட வேண்டியிருக்கும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் கல்வி அமைச்சர், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.இரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஜ-117)

# ஆய்வு அறிக்கை வரும் வரை குடத்தனையில் மணல் அகழத் தடை!

வடமராட்சி,ஜன.12

குடத்தனை மணற்காட்டுப் பகுதியில் புவியியல் ஆய்வுகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும வரை அங்கு மணல் அகழ்வதற்குத் தடைவிதிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை தலைமையில் குடத்தனை அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

குடத்தனை சூழல் சுற்றாடல் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட மீன்பிடி ,நீரியல் பிரதி ஆணையாளர் யோசப், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் உட்பட பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

குடத்தனை மணற்காட்டுப் பகுதியில் மணல் அகழப்பட்டதால் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டு கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அப்பகுதியில் தொடர்ந்து மணல் அள்ளலாமா என்பது பற்றி சுற்றாடல் சூழல் பாதுகாப்பு அமைச்சின் ஆய்வாளர்களைக் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்வதென்றும் -

அவர்களின் அறிக்கை கிடைத்த பின்னரே இறுதி முடிவு எடுப்பதென்றும் -

அதுவரையில் அப்பகுதியில் மணல் அள்ளத் தடை விதிப்பதென்றும் - கூட்டத்தில் யோசனை கூறப்பட்டது.

இதனை ஏற்று மணல் அள்ளத் தடை விதிப்பதென தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக யாழ்.அரச அதிபருக்கும் தெரியப்படுத்த முடிவு செய்யப்பட்டது. மணல் ஏற்ற உரிமை பெற்ற உழவு இயந்திரங்கள், லொறிகள் ஆகியவற்றின் அனுமதிகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (ஒ-173)

# கிழவியைக் குமரியாக்கும் இயந்திரம்

கடந்த ஆண்டினை நினைத்துப் பார்க்கும் போது, அமெரிக்காவின் உலக வர்த்தகக் கட்டடம் மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதலை எவரும் மறந்துவிட முடியாது. இந்தப் பேரழிவுக்குட்பட்ட நியூயோர்க் கட்டடத் தொகுதியிலுள்ள ஒரு மாடிக் கட்டடமோ அல்லது அதுபோல இன்னொன்றோ தெரியவில்லை. அதை வைத்து ஒரு துணுக்குக் கதை வழங்கிவருகிறது....

நியூயோர்க்கிலுள்ள அதியுயர் மாடிக் கட்டடமொன்றின் உச்சிமாடியில் உல்லாசப் பயணிகளாக வந்த மூன்று நண்பர்கள் தங்கியிருந்தனர். அவர்கள் பகலெல்லாம் ஊரைச் சுற்றிவிட்டு இரவானதும் தங்கள் அறைக்கு வந்து விடுவார்கள்....

ஒருநாள் அப்படி அவர்கள் களைத்துப்போய் அந்த விடுதிக்கு வந்தபோது அவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. வரவேற்பறையில் இருந்தவர்கள் மின்னுயர்த்தி (Lift) பழுதடைந்துள்ளதால் அவர்கள் படிகள் மூலமே மாடிக்குச் செல்லவேண்டும் என வருத்தத்துடன் தெரிவித்தனர்....

அது பல நூறு படிகளைக் கொண்ட பலமாடிக் கட்டடம். அதன் உச்சி மாடிக்கு அவர்கள் நடந்து போவதென்றால்....?

அதனால் அவர்கள் இப்படி ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். களைப்புத் தெரியாமலிருப்பதற்காக ஆளுக்கு ஒரு கதை சொல்லிக்கொண்டு வரவேண்டும் என்பதுதான் அது! அதாவது 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது' என்பது போல இது கதை....

முதலாவது ஆள் வீரக்கதை, இரண்டாவது ஆள் காதல் கதை, மூன்றாவது ஆள் மர்மக் கதை என்பதற்கிணங்க 'வீரக் கதை' நடந்து கொண்டிருக்கிறது.... பல மாடிகளைத் தாண்டி விட்டார்கள். இரண்டாவது ஆள் காதல் கதையின் சுவையுடன் அவர்கள் ஏறக்குறையத் தங்கள் மாடியறையையே நெருங்கிவிட்டார்கள். மூன்றாவது திடுக்கிடும் - மர்மக்கதை.... அதனாலென்ன? கதை முடியாவிட்டால் அறைக்குள் சென்ற பிறகும் அதைத் தொடரலாந்தானே? "ம்.... ஆரம்பிக்கலாம்" என்றனர் இருவரும்.



மர்மக் கதைக்காரன் சொல்லுகிறான் "மாடி அறைத திறப்பை கீழே வரவேற்பறையில் விட்டுவிட்டு வந்து விட்டேன்" இந்தத் துணுக்குக் கதைக்கு மூக்கும் முழியும் வைத்து கலைஞர் மு.கருணாநிதி ஒரு பெரிய கதையைக் கற்பனை செய்து எழுதியிருந்ததும் நினைவுக்கு வருகிறது. அதாவது அந்த நண்பர்கள் சொன்னதாக வருகின்ற வீரக் கதையையும் காதற்கதையையும் தாமே புனைந்து அதிலே பொருத்தியிருந்தார்.

நகர அபிவிருத்திகளோடு சேர்ந்து இந்த மின்னுயர்த்திகளும் நவீனமயப்பட்டு வந்திருக்கின்றன. கொழும்பு நகரின் சில இடங்களிலேயுள்ள சிலவகை மின்னுயர்த்திகளை இயக்குவதற்கென அதற்குள்ளேயே இயக்குநர்கள் இருப்பார்கள். அழைப்பு 'பட்டனை' அழுத்தி அதை வரவழைக்கலாம். கதவு திறந்துகொண்டதும் உள்ளே நுழைந்து மாடி இலக்கத்தைக் குறிப்பிட்டாலே போதும். இதிலே எமக்கு எந்தவித சிரமமோ பிரச்சினைகளோ இருக்காது.

வேறு சில இடங்களிலுள்ள சிலவகை மின்னுயர்த்திகளை நாமேதான் இயக்கியாகவேண்டும். அதற்குள் இயக்குநர்கள் என்று எவரும் இருக்கமாட்டார்கள். அது எப்படி இயங்குகின்றது - எப்படி இயக்கவேண்டும் என்பதைச் சரியாகப் புரிந்துகொண்ட பின்னரே அதற்குள் நுழையவேண்டும். இதிலே ஒரு சிறு தவறுவிட்டாலும் விபரீதமாகிவிடலாம். இத்தகைய சங்கதிகளை யாரிடமிருந்தாவது கேட்டுத் தெரிந்துகொள்வதைவிட 'நில், கவனி...' அதாவது 'வெயிற் அன் ஸீ' என்ற முறையில் கற்றுக்கொள்வதுதான் நல்லது. அதன்பின் 'வெள்ளோட்ட'மாக முதலில் யாருடனாவது அல்லது யாருக்குப் பின்னாலாவது நுழைந்து பார்க்கலாம் - பயிற்சி பெறலாம். ஆனால் அவர்களும் உங்களைப் போன்ற 'அனுபவசாலி'யாக இருந்து விடக் கூடாது.

இவைகளைத் தவிர இலங்கை வங்கித் தலைமைக் கட்டடம் போன்ற இடங்களிலே முதல் மாடிக்குப் போவதற்கென நகரும் படிகள் (Escalator) இருக்கும். இங்கே ஒரு பக்கத்திலே மேலே போவதற்கான ஒரு தொகுதிப் படிகளும் மறுபக்கத்திலே கீழே இறங்குவதற்கான இன்னொரு தொகுதிப் படிகளும் நகர்ந்து வாறிருக்கும். மேலே போவதற்கு என்றால் முதலாவது படியிலே கவனமாகக் கால்களைப் பதித்து நிதானமாக நின்று கொள்ளவேண்டும். படிகள் எம்மை மேலே கொண்டு செல்லும். மேல் தளம் வந்ததும் அதே கவனத்துடனும் நிதானத்துடனும் அதிலே கால்களைப் பதிக்க வேண்டும். இறங்கும்போதும் அப்படித்தான். ஏற்கனவே இதிலே ஏறி இறங்கி நல்ல அனுபவம் பெற்றவர்கள் அந்தப் படிகளின் நகரும் வேகம் போதாதென்று தாங்களும் வேறு அதை முந்திக்கொண்டு அதிலே நடப்பதையும் காணலாம். இதற்கும் கூட 'நில் கவனி...' உதவுவதைப் போல வேறு எவரும் எமக்கு உதவமுடியாது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மின்னுயர்த்திகள் இல்லாத காரணத்தினால் நோயாளிகள் அனுபவிக்கின்ற அவலம், அவமதிப்புப் பற்றியெல்லாம் முன்னொரு சமயம் குறிப்பிட்டிருந்தேன். கொழும்பில் எல்லா வசதிகளும் கொண்ட அரசாங்கத் தொடர்மாடிகளிலும் ஏனோ தெரியவில்லை, சொல்லிவைத்தாற்போல இக் குறைபாட்டினைக் காணலாம். அதனால் அங்கு குடியிருப்பவர்கள் சில சந்தர்ப்பங்களிலே படுகின்ற அவலமும் சொல்லி மாளாது.

ஒரு நாட்டுப்புற மாது புதிதாகப் பட்டணம் பார்க்க வந்திருந்தாள். ஒரு 'லிப்ட்' அறைக்கு முன்னின்று நான் முன்னர் குறிப்பிட்ட 'வெயிற் அன் ஸீ' பொலிசியடிப்படையில் நடப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தாள். கதவு திறந்துகொண்டதும் ஒரு கிழவி அதற்குள் ஏறிக்கொள்ள 'லிப்ட்' மேலே போய்விடுகிறது. சற்று நேரத்தின் பின் அது மீண்டும் கீழிறங்கியது கதவு திறந்துகொள்ள, ஓர் இளம் கட்டழகி ஒயிலாக அங்கிருந்து வெளியே வருகிறாள்.

பார்த்துக்கொண்டிருந்த மாதுவுக்கு ஆச்சரியமாக விருந்தது. கிழவியைக் குமாரியாக்கும் இயந்திரம் கூட பட்டணத்துக்கு வந்துவிட்டது போலிருக்கிறது என எண்ணி வியந்தாள். அடுத்தமுறை வரும்போது தனது கணவரையும் அழைத்துவரவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

- எஸ். அன்பின் -



சமூக சேவை நிறுவனமான 'சன்' நிறுவனம் 2001ஆம் ஆண்டு சிறுதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் கரவெட்டிப் பகுதி வறிய குடும்பங்களுக்கு ஒரு தொகை நிதியை அண்மையில் கையளித்தது.

இந்த நிறுவனத்தின் பொருளாளர் அன்ரனிப்பிள்ளை இதற்கான காசோலையைக் கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு. ஜேசுரெட்ணத்திடம் கையளிப்பதையும், அருகில் 'சன்' நிறுவன செயலாளர் உட்பட நிறுவன அங்கத்தவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஜ-6)

# கெற்பேலி அரசினர் பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில்!

தென்மராட்சி,ஜன.12

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கெற்பேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

இப்பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் இந்தப் பாடசாலை இயங்கவுள்ளதாகவும், இப்பாடசாலையின் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் நாளைய தினம் ஆசிரியர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

தென்மராட்சியில் சொந்த இடத்தில் இயங்கவுள்ள பன்னிரண்டாவது பாடசாலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-117)

# இந்து குரு பீடாதிபதிக்கு இன்று பீடாரோகண விழா!

வலிகாமம் தெற்கு,ஜன.12

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினால் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தான ஆதீன குருவும், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதான குருவுமாகிய அதிவந்தனீய பிரம்மஸ்ரீ ஜம்புவேஸ்வர மஹேஸ்வர சிவாசாரியார் அவர்களின் பீடாரோகண விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறஉள்ள இவ்விழாவை சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியமும் ஏனைய சமய நிறுவனங்களும் இணைந்து ஒழுங்குசெய்துள்ளன.

யாழ்பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ பி.கோபாலகிருஷ்ண ஐயர் விழாவுக்கு தலைமைவகிப்பார். விழாவின் தொடக்கவுரையை பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் நிகழ்த்துவார்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.



சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தினரால் பீடாதிபதி அவர்கள் பிரம்மஸ்ரீ நா.பாலசுப்பிரமணிய குருக்களால் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படுவார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயர், பிரம்மஸ்ரீ நா.சுப்பிரமணியக் குருக்கள், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ. சோ.தண்டபாணி தேசிகர், எம்.கே. பத்மநாதன், வர்த்தக சங்கப் பிரதிநிதி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

முன்னதாகக் குருபீடாதிபதி மங்கள வாத்திய சகிதம் நீராவியடிப் பிள்ளையார் ஆலய முன்றிலிலிருந்து விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவார். (ஜ-152)

## புண்ணியநாச்சி அம்மையாரின் குருபூசை:

# யாழ்.சைவ பரிபாலன சபையினர் பண்ணிசைப் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்.சைவ பரிபாலன சபையினர் புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசை சார்பான பண்ணிசைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர்.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் தரம் 3 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்குபற்ற முடியும் என்றும் -

போட்டி தொடர்பான சகல விவரங்களும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

சைவ பரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 20 ஆம் திகதி ஆகும். போட்டிகள் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (க-7)

# மண்ணெண்ணெய் விநியோகத்தில் விவசாயிகள் புறக்கணிப்பு

## சம்மேளனங்கள் கவலை

சுன்னாகம்,ஜன.12

தற்போது இடம்பெறும் மண்ணெண்ணெய் விநியோகத்தில் விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக விவசாய சம்மேளனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

அண்மைநாள்களாக மழை பெய்யாதுள்ளதால் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை மேற்கொள்வோர் நீர்ப்பாசனம் செய்யவேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டிய விவசாய சம்மேளன வட்டாரங்கள், விவசாயிகளுக்கான பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளன.

தற்போது வரிசை அடிப்படையிலும், குடும்பப் பங்கீட்டு அட்டைக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மண்ணெண்ணெய் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ஜ-27)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சுருதிப் பெட்டி, வயலின் விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (96845)

தட்டு ஓடு, முகட்டு ஓடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.சிங்கராசா, கைதடி வடக்கு, கைதடி. (96950)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர்(1 kg 140/-), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 2 மாதம் நிரம்பிய சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. S.கண்ணா, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (96850)

**Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (96844)

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P 3529, 2867. (96991)

## தவறிவிட்டது

பொன்னுத்துரை தயாளினி என்பவருடைய யாழ்.பல்கலைக்கழக பட்டத்துக்குரிய சான்றிதழ் (சுருள்) 09.01.2002இல் தாவடிச் சந்திக்கும், பல்கலைக்கழகத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எக்ஸ்போ வீடியோ சென்ரர், கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (96965)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வராஜா ஷாமினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.808581680V), விசேட அடையாள அட்டை (இல.091010430) என்பன யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சைவப் பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (96971)

கோண்டாவிலைச் சேர்ந்த இராசையா இலக்சுமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 345141065X) மற்றும் பெறுமதிமிக்க பொருள் என்பன ஆஸ்பத்திரி வீதிக் கடை ஒன்றில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரேசன் றோட், கோண்டாவிலில் உள்ள சிவனேசன் சைக்கிள் கடையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (96981)

## சங்கீதம்

கிருஷ்ணவேணி மயில்வாகனம் அவர்களால் ஆக்கப்பட்ட G.C.E.(O/L) கர்நாடக சங்கீதப் புத்தகம் வெளிவந்துவிட்டது. வட இலங்கைச சங்கீத சபைப் பரீட்சைக்கு ஏற்ற பல விடயங்களும் அறிமுறை, செய்முறை விடயங்களுடன் 6 வருட வினா விடைகளும் அடங்கியுள்ளன. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். (96931)

## இசை வகுப்புகள்

ஓர்கன், கிற்றார், மெலோடிக்கா, வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல் இசை வகுப்புகள் நாளை 13.01.2002 ஆரம்பம். தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், C/o து.விசாகராசா, ஆலடி, உயரப்புலம். (96934)

## புதிய கணித வகுப்புகள்

தரம் 6 இலிருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில், **Distinction** பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (96968)

## ஆங்கிலம் விசேடமாக

O/L Distinction, Credit பெறுபேறு அடையவும் A/L, G.A.Q., தரம் 9,10, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். B.Sc.(Cey.) இல.85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (96939)

## புறொயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி **(Broiler)** 1kg 140/=, தினமும் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 94, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (சட்டநாதர் சிவன் கோயிலுக்கும் கல்வியங்காட்டுச் சந்தைக்கும் இடையில்). (96944)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

**Prima** இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No. 3529, 2867. (96992)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

இப்போட்டியை யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் ஆரம்பித்து வைப்பார். (ஐ-8)

## கூட்டம்

வடமராட்சி, ஜன.12

பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிராமக்கோடு மாதிரி முன்பள்ளியில் சங்கத் தலைவி திருமதி சற்குணராணி அழகராசா தலைமையில் நடைபெறும்.

இப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களை அதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## துறவறப் பொன்விழா



புனித ஜோண் பொஸ்கோ
முன்னாள் அதிபரும் தற்போது
கல்முனை கார்மேல்மடத்தில்
பணிபுரிபவருமான

**அருட். சகோ.M. அன்ரனீனா**

A.C. அவர்கள்

இன்று தமது துறவறவாழ்வின் 50 ஆண்டுகளுக்காக இறைவனுக்கு நன்றிகூறும் வேளையில், [illegible] இன்னும் பல ஆண்டுகள் பணிபுரிய வாழ்த்துகிறோம்.

(யாழ். நகரில் நன்றி விழா 2[illegible].01.2002இல்)

*யாழ்ப்பாணம்.* (96979) - குடும்பத்தினர்

## புங்கடி பிள்ளையார் ஆலய பரிபாலன சபை

கச்சாய்

**விநாயகர் அடியார்களே!**

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று மேற்படி ஆலயத்தைத் திறந்து பூசைகள் நடைபெறவுள்ளதால் இன்று (12.01.2002) சனிக்கிழமையும் நாளை (13.01.2002) ஞாயிற்றுக்கிழமையும் சிரமதானப் பணிகள் நடைபெறும் என்பதையும் நாளைமறுநாள் (14.01.2002) திங்கட்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு விசேஷ பிராயச்சித்த அபிஷேகமும், தொடர்ந்து பூசைகளும் நடைபெறும் என்பதையும் அடியார்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

(96958) -ஆலய பரிபாலன சபையினர்.

## பௌதிகவியல் - A/L

**2004 மற்றும் 2002 Day Class வகுப்புகள் நடைபெறுகின்றன.**

☆ கீன் கல்வி நிறுவனம்:- திருநெல்வேலி
☆ பீக்கென் (Beacon) :- ஆவரங்கால்
☆ ஐடியல்:- நீர்வேலி
☆ சாம்றொக்:- ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

ஆசிரியர்:- கிரிதரன்

மேலதிக விவரங்கள் அந்தந்த நிறுவனங்களில்.

(96894)

"இன்றைய சிறார்கள் நாளைய உலகின் சிற்பிகள்"

## திருமறைக் கலாமன்றம் சிறுவர் கலைக்கூடம்

CHILDREN'S THEATRE

இக்கலைக்கூடத்தில் 2002ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் சேர்ந்து பயிலவிரும்பும் சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை மனதிற்கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமையுடன் வளரவும், கலை, விளையாட்டு ஊடகங்களுக்கூடாக உருவாக்கம் பெறவும் தக்கதாக இலவசமாக நடத்தப்படுகின்றது.

வயது எல்லை:

*பிரிவு I* 5-12 வயது வரை.
*பிரிவு II* 12 - 16 வயது வரை.

**விண்ணப்ப முடிவு திகதி: 31.01.2002**


விண்ணப்பப் படிவங்களை நேரடியாக மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி: 021-2393
இன்டர்நெட் www.CPATEAN.ORG (C/20224)

பொங்கல் பாடல்களைக் கொண்ட "செம்மணல்" ஒலிப்பதிவு நாடாவை மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## உலகப் பிரசித்தி பெற்ற 9.9 குதிரைவலு கொண்ட YAMAHA BOAT எஞ்சின் உங்களுக்காக



☆ அதி வேகமுடையது.
☆ அதிக எரிபொருளைப் பாவிக்காதது.
☆ இராட்சதப் பலம் கொண்டது YAMAHA.

விற்பனைக்குப் பிந்திய சேவை வழங்கப்படும்.
அசல் உதிரிப்பாகங்களை ஜப்பானிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8, 9.9, 15 குதிரைவலு கொண்ட YAMAHA BOAT எஞ்சின்களும் விற்பனைக்கு உண்டு.

இறக்குமதிசெய்து விற்பனை செய்வோர்
**அசோசியேட்டட் மோட்டர்(லங்கா) கம்பனி லிமிட்டெட்**
14/9, ஜினரத்தன மாவத்த,
கொழும்பு - 02.
தொலைபேசி: 304231, 077-389573.

யாழ்.மாவட்ட உத்தரவுபெற்ற விற்பனை முகவர்:
திருச்செந்தூரன் டேடிங் கொம்பனி
315(163), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (20130)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் கந்தையா பன்னிருகரம்**

*(நெல்லியடி, நியூகௌரி சைக்கிள் பாட்ஸ் - உரிமையாளர்)*

உயிர்ப்பு 15-01-1944 சங்கமம் 30-11-2001

தீபங்கள் தாங்கிய
திருக் கார்த்திகை நன்னாளில்
தீயுடன் சங்கமமானீர்களே!
விழிகளில் நீர் கரையுதப்பா
ஆறாது நித்தமும் தொடருதப்பா!
நினைவுகள் பசுமையாய்
நாளும் நிழலாட!
கருகியே எம் நெஞ்சம்
நீறாய்க் கொதிக்குதப்பா!
கனத்த எம் நெஞ்சங்களில்
என்றும் உயிரோட்டமுள்ள
கவிதை; காவியம் நீங்களப்பா!

அமரரின் அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (13-01-2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இதனை அனைவரும் தங்களிற்குரிய தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*'சாந்தி பவனம்',* பிரிவால் துயருறும்:
*கொற்றாவத்தை, கரவெட்டி.* (96982) குடும்பத்தினர்.

# குடாநாட்டில் இன்றுமுதல் ஒருவாரம் ஆன்மீக எழுச்சி வாரம் பிரகடனம்



**சு**வாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினம் ஜனவரி 12ஆம் திகதி ஆகும். அத்தினம் நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. மகானுடைய இந்த ஜெயந்தி தினத்தையொட்டி ஒருவாரகாலத்திற்கு எழுச்சி வாரத்தை அனுஷ்டிக்குமாறு யாழ்.குடாநாட்டு மக்களை ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர் குழுவினர் கேட்டிருக்கின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் ஒவ்வொரு இளைஞனுக்கும் மிகவும் அவசியம் தேவைப்படுகின்றன. அவர் காட்டிய நெறியில் வாழ நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தேவை எமக்கு அவசியமாகின்றது. இன்றைய இளைஞர்களிடத்திலே தெய்வ பக்தியும் தேசபக்தியும் வேண்டும். பறவைக்கு இரண்டு சிறகுகள்போல, வண்டிக்கு இரண்டு சக்கரங்கள் போல தேசம் வீறுடன் விளங்க தெய்வ பக்தியும் தேச பக்தியும் மிகமிக அவசியமாகின்றது. அதனையே சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தியுள்ளார்.

தேச முன்னேற்றம் என்னும் தேர் சக்கரத்தை கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். பெயருக்காகவோ புகழுக்காகவோ அவை போன்ற பொருளற்ற வேறு எந்த அற்ப விசயத்துக்காகவோ திரும்பிப்பார்க்க நில்லாதீர்கள்! சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள். உங்கள் அனைவர் மீதும் ஆண்டவனின் ஆசிகள் பொழியும் என இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் ஆன்மீக எழுச்சி அறைகூவலை விடுத்திருக்கின்றார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் வாழ்வும், அவர் நமக்கு விட்டுச் சென்ற செய்தியும் மட்டுமே எங்கள் இளைஞர்களுக்குப் புதிய வழியையும் ஒளியையும் காட்டமுடியும் என்பதை அனைவரும் உணர்ந்து அவ்வழியில் வாழ விரும்பவேண்டும்.

இன்றைய இளைஞர்களிடத்தில் தெய்வீகபக்தி, தேசபக்தி, மொழிப் பற்று, கடமையுணர்வு, தன்னம்பிக்கை, ஒழுக்கம் போன்ற சிறந்த விழுமியத் தன்மைகள் குறைந்து காணப்படுகின்றன. இதனால் இனமத பூசல்களும், விரோதச் செயல்களும் மலிந்துகொண்டிருக்கின்றன. இவற்றினைக் கண்ட விவேகானந்தர் சொல்லுகின்றார் "நாட்டின் பொன்னான எதிர்காலமே உங்களைத் தான் சார்ந்திருக்கின்றது. நாட்டின் வருங்கால நம்பிக்கைகள் உங்களையே எதிர்நோக்கியுள்ளன. எனவே செயலற்று வாழ்க்கையை வீணாகக் கழித்துக்கொண்டிருக்கின்ற உங்களைப் பார்க்கும்போது என் மனம் சொல்லமுடியாத வேதனைப்படுகின்றது; உடல் பலவீனத்தையோ மனப் பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் நீங்கள் அணுக்கக் கூடாது என்பதே நான் உங்களுக்குப் போதிக்கவிரும்பும் முதன்மையான உபதேசம் ஆகும்.

"துரதிஷ்டவசமாக இந்த வாழ்க்கையில் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் எந்தவிதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல் இருள் அடைந்த இந்த வாழ்க்கையில் தட்டித்தடுமாறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த இலட்சியமுள்ள ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன். ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே உயர்ந்த ஓர் இலட்சியத்தைக் கொண்டிருப்பது மேலானது."

இவ்வாறாக சுவாமிகள் தனது ஆன்மீக எழுச்சிக் கருத்துக்களைத் தந்து, மனித நேயத்தை, மாண்பான சிந்தனைகளை ஒவ்வொரு மனிதனிடத்திலும் வளர்த்துச் செல்வதற்கு அரும் பாடுபட்டுள்ளார். அவரது அளப்பரிய தியாகத்தை - சீரிய கருத்துக்களை - சிறந்த நெறிகளை - இன்றைய மனித சமுதாயம் அவசியம் கற்கவேண்டியது - கற்றாங் கொழுக வேண்டியதும் - தலையாய கடமையாகும். எனவே நாம் அனைவரும் ஒன்றாவோம். எங்கள் வீடுகளிலும் பள்ளித் தலங்களிலும் நாம் கடமைபுரியும் பணிமனைகளிலும் சுவாமி விவேகானந்தரின் சீரிய சிந்தனைகளை நெறிப்படுத்துவோம். 'எழிமின் விழிமின்' ஏன்ற தாரக மந்திரங்களுக்கிணங்க நல்ல சமயியாக வாழ்வோம்.

> **வீரத் துறவி சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினமான இன்று சனிக்கிழமை முதல் ஒருவாரகாலத்தை ஆன்மீக எழுச்சி வாரமாக அனுஷ்டிக்குமாறு ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அதனை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இந்த வகையில் மலரும் இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி முதல் (இன்று முதல்) ஒருவார காலத்திற்கு சுவாமி விவேகானந்தர் எழுச்சி வாரத்தினைக் கொண்டாடுமாறு கல்வித்திணைக்களங்களுக்கும், கல்வித்திணைக்களங்களுடாக் பாடசாலைகளுககும் மற்றும் சமய, சமூக நிறுவனங்களுக்கும் ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர் குழுவினராகிய நாம் அன்புரிமை தழுவிய ஆன்மீக அறிவித்தலை விடுத்துள்ளோம். இந்த வகையில் யாழ்.குடாநாட்டில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து இந்த எழுச்சி வாரத்தினைக் கொண்டாடுவோமாக!

**காரை.எம்.பி.அருளானந்தம்**

இத்துடன் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் பல்துறை சார்ந்த அறிஞர்கள் பங்கேற்கும் 'சுழலும் சொற்போர்' அரங்கம், கவியரங்கம், விவாத அரங்கம் போன்ற நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அனைவரும் இந்த நிகழ்வுகளில் கலந்து பயன்பெறுமாறும் அழைக்கின்றோம். ★

# கலை இலக்கியத் தகவல்களை ஆவணமாக்கிய பத்தி எழுத்துக்கள்

**நூல்வரிசை**

**1989**இன் ஆரம்பத்திலிருந்து 1990 மத்திவரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த வார ஏடான 'திசை'யில் வெளிவந்த, கலை - இலக்கிய நடப்பு விவகாரங்கள் பற்றிய 'பத்தி' எழுத்துக்கள், இப்போது 'தூவானம்' என்ற நூலாக வெளிவந்துள்ளன. 'திசை'யில் 'தூவானம்' என்ற தலைப்பின்லேயே அதன் துணை ஆசிரியராக இருந்த அ.யேசுராசா - 'நீலாம்பரன்' என்ற புனைபெயரில் இவற்றை எழுதியிருந்தார். இப் போது 'மூன்றாவது மனிதன் பதிப்பக' வெளியீடாக, அழகிய கையடக்கமான இந்நூல் வெளிவந்துள்ளது.

ஏறத்தாழ பத்துதாண்டுகளுக்கு முன்னர் பத்திரிகை எழுத்துக்களாக வெளிவந்த இக்குறிப்புக்களை இப் போது படிக்கும் போதும் அவை பயனுள்ள - காத்திரமான - குறிப்புக்களாகவே உளளன. இதனிலும் மேலாக, கலை, இலக்கியம் பற்றிய மேலெழுந்தவாரியான - ஆழமற்ற - கருத்துக்களே ஆதிக்கம் பெற்றுள்ள இன்றைய சூழலில், இந்நூலின் வருகை 'காலத்தின் தேவை' எனவும் கருதலாம். கலை, இலக்கியம் பற்றிய ஆர்வமுள்ள - தேடலுள்ள - வாசகர்களுக்கு இந்நூல் ஒரு பொக்கிசமாகவே அமையலாம; நல்ல கலை, இலக்கியங்களில பரிச்சையங் கொள்ளத் துடிக்கும் ஆர்வலர்களுக்கு, இந்நூல் சிறந்ததொரு வழிகாட்டியும் ஆகலாம்.

பத்திரிகைப் 'பத்தி எழுத்துக்கள்' இத்தகைய சிறப்புக்களைப் பெறமுடியுமா? பொதுவான கண்ணோட்டத்தில் அவை வெறும் தகவல்களைத் தரும் குறிப்புகளாகத்தானே இருக்க வேண்டும்? நூலில் என்னுரையில் யேசுராசா எழுதுகின்றார். "...தகவல்களைத் தருதலும் சுவரசியத்தை ஊட்டுதலும் மட்டுந்தான் 'பத்தி' எழுததின் நோக்கங்கள் என்றில்லை. 'பத்தி' எழுத்தாளன் ஒருவன் தனது காலத்தின கலை இலக்கிய நிகழ்வுகள், ஏற்கனவே தான் அறிந்துள்ள - பலருக்குத் தெரியவராத - தகவல்கள் என்பவற்றைத் துல்லியமாகப் பதிவுசெய்யும் போது, அந்தப் 'பத்தி' ஓர் ஆவணமாகக் கொள்ளத்தக்கதாகிறது. நுட்பமான இரசனையும், கூரிய நோக்கும் கொண்ட ஒருவர், கலை, இலக்கியப் படைப்புகள் பற்றிய தனது மனப் பதிவுகளை எழுதும்போது, 'தரம் - தரமின்மை' என்ற பக்கங்களில் ஒளி பாய்ச்சப்படுகின்றது; வாசகரைச் சரியான திசையில் ஆற்றுப்படுத்தலும் நிகழ்கிறது."

'மூன்றாவது மனிதன்' இதழின் ஆசிரியரும் பதிப்பக உரிமையாளருமான எம்.பௌசர், யேசுராசா பற்றி எழுதுகின்றார். "அ. யேசுராசா - சமூக அக்கறைமிக்க ஒரு படைப்பாளி, தேடல் மிக்க வாசிப்பாளர், பத்திரிகை ஆசிரியர் படைப்பு, வாசிப்புச் செயற்பாடுகளின் ஊடே ஒரு விமர்சன மனோ நிலைக் கண்ணோட்டத்தில் இயங்குபவர்."

'பத்தி' எழுத்துக்களும் காத்திரமானவையாக அமையலாம் என்பதற்கு 'தூவானம்' சிறந்ததோர் எடுத்துக் காட்டு. நூல் ஆசிரியரின் தீவிரமான தேடலும் கலை, இலக்கிய, சமூக அக்கறைகளுமே இக்காத்திரத் தன்மைக்குக் காரணங்களாகும்.

இநநூல் கலை, இலக்கியம் தொடர்பான பல விடயங்களைப் பற்றிப் பேசுகின்றது. இந்தியத் திரைப்படங்கள், சிங்களத் திரைப்படங்கள், ஜேர்மன் திரைப்படங்கள் என்ற ரீதியில பன்னாட்டுத் திரைப்படங்கள், பன்மொழிக் கவிதைகள், கலை இலக்கியம் தொடர்பான பன்னாட்டு நிறுவனங்கள், நூல் வெளியீட்டு விழாக்கள், உள்நாட்டு - வெளிநாட்டுக் கலைஞர்கள், கலை இலக்கியச் சிற்றிதழ்கள், நடப்புக் கலை, இலக்கிய 'விவகாரங்கள்', விருதுகள் என்பனவாக... முப்பத்தொரு தலைப்புகளில் (சிலவற்றில் உப தலைப்புகளும்) 'கட்டுரைகள்' இடம்பெற்றுள்ளன.

**குப்பிளான் ஐ.சண்முகன்**

இது தொடர்பான - சுவாரசியமானதொரு புள்ளிவிவரத்தைப் பார்க்கலாம். இந்நூலில் இருபத்தைந்திற்கு மேற்பட்ட ஓவியர்கள், தொண்ணூறுக்கு மேற்பட்ட திரைப்படக் கலைஞர்கள், நூற்றைம்பதிற்கு மேற பட்ட எழுத்தாளர்கள் என்பதாக முந்நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களைப் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் அண்ணளவாக எழுபது பன்னாட்டுத் திரைப்படங்கள், ஐம்பது கலை, இலக்கியம் தொடர்பான நிறுவனங்கள், முப்பது பத்திரிகைகள் - சஞ்சிகைகள், ஐம்பதிற்கு மேற்பட்ட நூல்கள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. இவையெல்லாம் நூலாசிரியரின் பரந்துபட்ட அவதானிப்புக்களையும் - நுட்பமான கலை, இலக்கிய இரசனையையும் காட்டுவதோடு, சிறிய இந்த நூலின் 'பிரமாண்டத்தையும்' வெளிப்படுத்துகின்றன.

**நூல்: 'தூவானம்'**
**ஆசிரியர்: அ.யேசுராசா**

இவ்வாறு கலை, இலக்கியத்தன் பல்வேறுபட்ட தளங்களைப் பற்றி யேசுராசாவின் குறிப்புகள் பேசிய போதிலும், கவிதைகளையும் திரைப் படங்களைப்பற்றியுமே அலாதியான ஈடுபாட்டுடன் அவர் எழுதுகிறார். அவரே என்னுரையில் 'திரைப்படமே எனது முதற் காதல்' எனக் குறிப்பிடுகிறார். நூலில் ஆழ்ந்துபோகையில், கவிதைகளே அவரது 'அடுத்த காதல்' என்று தோன்றுகின்றது.

நூலில் ஆங்காங்கே நுட்பமான இரசனையுடன் அவர் கவிதைகளை அணுகும் - அனுபவிக்கும் - அறிமுகப் படுத்தும் - விதம் அருமையாக வந்துள்ளது. மஹாகவி, தா.இராமலிங்கம், சண்முகம் சிவலிங்கம், வ.ஐ.ச.ஜெயபாலன், மைத்ரேயி, கலிஸ்ரா இராசநாயகம், இளவாலை விஜயேந்திரன், வவுனியா திலீபன் முதலிய நம்நாட்டுக் கவிஞர்கள், அவர்களின் கவித்துவ வரிகளுடன் - ஆசிரியரின் இரசனைக் குறிப்புகளுடன் - நூலில் இடம்பெற்றுள்ளார்கள். 'உள்ளத்தின் உள்ளுறை வெளிச்சம் பிரகாசிக்கும் போது...' ஏற்படும் படைப்பு உந்துதல் பற்றிய காசியபனின் கவிதை வரிகளுடன், படைப்பு மனோநிலை பற்றி யேசுராசா எழுதுகின்றார். அத்துடன், இந்திய சுதந்திரப் போராட்டவீரரும் கவிஞருமான மௌலானா அபுல்கலாம் ஆஸாத்தின் மொழி பெயர்ப்புக் கவிதையும், பை ஜூயி என்ற சீனக் கவிஞரின் இரண்டு மொழிபெயர்ப்புக் கவிதைகளும் இரசனைக் குறிப்புகளுடன் நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்தியத் திரைப்படங்கள் - குறிப்பாக மலையாள, வங்காளத் திரைப் படங்கள், ஜேர்மன் திரைப்படங்கள், சிங்களத் திரைப்படங்கள் பற்றிய ஏராளமான குறிப்புக்களை யேசுராசா தருகின்றார். பிறவி, சிதம்பரம், அக்கரே, RETURN, தாச நிசா, கம்பெரலிய, நிதானய, சத்சமுத்ர, தந்தையர்களினதும் தனயர்களினதும் நாடு, மந்தை முதலிய திரைப் படங்கள் பற்றியும், அடூர் கோபாலகிஷ்ணன், சசிதரன், கே.ஆர்.மோகனன், அரவிந்தன், பரதன், யில்மெஸ் குனே, சத்யஜித் ரே, புத்ததேப் தாஸ்குப்தா, நிக்கோ ஹொவ்மான், லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ், சிறி குணசிங்க, மஹகம சேகர, தர்மசேன பத்திராஜ, தர்மசிறி பண்டாரநாயக்க முதலிய திரைப்பட நெறியாளர்களைப் பற்றியும் யேசுராசா சிலாகிக்கின்றார் - இவைபோல மேலும் பல திரைப்படங்கள் - திரைப படக் கலைஞர்கள் பற்றிய குறிப்புகளை நூலில் பரவலாகக் காணலாம்.

முடிவாக, கலை, இலக்கியத்தின் பல்வேறு தளங்களையும் உற்று நோக்கி, பயனுள்ள தகவல்களை அவற்றின் 'கனதி காத்திரத்தோடு' - சரியான திசைப்படுத்தலோடு - தரும் இந்நூல், இன்றைய காலத்தின் தேவை.




நூலில் இடம்பெற்றுள்ள, ஆஸாத்தின் 'பயணம்' கவிதையின் வரிகள்:

*"காலிலே தைத்த*
*முள்ளினைக் கழற்ற*
*ஒரு*
*கணம் திரும்பவும்.*
*காதலியோடு என்*
*ஒட்டகம் எங்கோ*
*ஓடி மறைந்தது!*
*ஒருகணம்*
*திரும்பிய கவனம்;*
*ஒரு நூறாண்டாய்*
*நீண்டது பயணமே."*

கலை, இலக்கிய ஆர்வளர்களின் கவனம் திரும்பாமல் - சரியான வழிப்பட, இந்நூல் உதவும்! ★



குருநகர் துணையிழந்தோர் மாதர் சங்கத்துக்கு யாழ்.மனித முன்னேற்ற நடுநிலையம் சிறுகைத்தொழில் முயற்சிக்காகச் சத்துணவு தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை வழங்கி உள்ளது. யாழ்.மனித முன்னேற்ற நடுநிலையத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை துணை இழந்தோர் மாதர் சங்கத்தலைவியிடம் அந்த இயந்திரத்தை ஒப்படைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் மனித முன்னேற்ற நடுநிலைய (கியூடெக்) இயக்குநர் அருட்திரு.சி.ஜீ. ஜெயக்குமார், அருட்திரு. எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் அடிகள் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: குருநகர் செய்தியாளர்)

## தியாக ராஜ்கோ வின் Rajko Inn Lodg

வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகளுக்கு நல்ல பாதுகாப்பான, காற்றோட்டமான சூழலில் அறைகள் நாள் வாடகை, மாத வாடகைக்கு விடப்படும். வெளிநாட்டுத் தொலைத்தொடர்பு வசதிகள், வாகன வசதிகள் உள்ளன.

தொலைபேசி: 554065, 554066
தொலைநகல்: 554067

தகவல்:
M.Thiyagaraj
Retired High Court Registrar
T.Nithiananthan
(Irrigation Dept.)
Karaveddy.

மேலதிக விவரங்களுக்கு:
K.Balendran,
No.27, Fareed Place,
Bambalapitiya.
(96995)


## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 13 - 10 - 1917



உதிர்வு 13 - 12 - 2001

### அமரர் தில்லையம்பலம் சதாசிவம்

*(ஓய்வுபெற்ற அதிபரும், பிரபல சோதிடரும் - புங்குடுதீவு)*

*எமது குடும்பத்தின் ஒளி விளக்கே!*
*பாசத்தின் உறைவிடமே!*
*பண்பின் சிகரமே!*
*நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள்*
*ஒருபோதும் எம் நெஞ்சைவிட்டு அகலாதப்பா!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

எங்கள் குடும்பத் தலைவர் தில்லையம்பலம் சதாசிவம் அவர்கள் சுகயீனமுற்றிருந்த வேளையில், வைத்தியசாலையில் சிகிச்சையின் போது உதவிகள் புரிந்தவர்களுக்கும், அவர் காலமான செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், இரங்கற்செய்தி தெரிவித்தோர், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் ஆகியோருக்கும் எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (12.01.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*41/4, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
(96997)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



13.12.2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### சந்திரசேகரர் குமாரசுவாமி

*(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)*

அவர்களது திடீர் மறைவினால் தவித்த எமக்கு உடன் வந்து உதவியோர், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (12.01.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*884, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*
(96983)

நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா செல்வராஜா

சந்நிதி வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா செல்வராஜா நேற்று (11.01.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முத்து - செல்வராஜாவின் (இளைப்பாறிய உத்தியோகத்தர் - சாமுவேல் அன் சன்ஸ்) அன்பு மனைவியும் ஆனந்தச்செல்வி, அருட்செல்வி ஆகியோரின் தாயாரும், வசீகரன், மகாலிங்கம் ஆகியோரின் மாமியாரும், டானியா, அஜந்த், அனித்தா, ஆசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி வீதி,*
*உடுப்பிட்டி.*
(96980)

தகவல்:
மு.செல்வராஜா (கணவன்)

## பொருள்களை யாழ்.செயலகத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஜன.12

கடந்த ஆண்டில் கப்பல் பயணத்தின் போது பிரயாணிகளால் எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் கொண்டு செல்ல அனுமதிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்ட பொருள்களை உரியவர்கள் யாழ். செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்கும் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலிலும் ஏனைய கப்பல்களிலும் எடுத்துச்செல்ல முடியாது என்று தடுக்கப்பட்ட வீடியோ கசற்றுகள், மின் உபகரணங்கள் என்பனவே யாழ்செயலகத்தில் உள்ளன.

இந்தப் பொருள்களுக்கு உரியவர்கள் தத்தமது பொருள்களை தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## திருவாசக முற்றோதல்

சங்கானை வெல்வில் இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு அபிஷேக பூசை நடைபெற்று திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (ஐ-8)

## நவாலியில் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு,ஜன.12

நவாலி வடக்கில் தேசிய இளைஞர் சேவை மன்ற கருத்தரங்கும், நிர்வாகக் குழு தெரிவும் ஜே-134 கிராம அலுவலர் இல்லத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளன.

18-28 வயதிற்கு இடைப்பட்ட ஜே-134 பிரிவைச் சேர்ந்த அனைத்து இளைஞர் - யுவதிகளையும் பிற்பகல் 4 மணிக்கு ஒன்றுகூடுமாறு கிராம அலுவலர் கேட்டுள்ளார். (ஐ-185)

## வவுனியாவில் தமிழ் விழா

வவுனியா,ஜன.12

வவுனியா திருமறைக்கலாமன்றத்தின் 2002ஆம் ஆண்டுக்கான தமிழ் விழா நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை முதல் மாலை வரை வவுனியா திருமறைக்கலாமன்ற கலையரங்கில் நடைபெறவுள்ள இவ் விழாவில் இலக்கியச் சந்திப்புகள், கவியரங்கம், நாடகங்கள், நடனம் உட்பட பல கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

## பாலர் பாடசாலை புதிய அனுமதிகள் - 2002

பரிபேதுரு ரிமர் மண்டப பாலர் பாடசாலை,
பரிபேதுரு கில்னர் மண்டப பாலர் பாடசாலை

மேற்படி எமது இரு பாலர் பாடசாலைகளும் 2002ஆம் ஆண்டுக்கான வகுப்புகளை ஆரம்பித்துவிட்டன. இன்னமும் இந்த ஆண்டுக்கான புதிய அனுமதிகளை உறுதிசெய்து கொள்ளாதவர்கள் 15.01.2002 செவ்வாய் காலை 9 மணிக்கு பாடசாலை மேற்பார்வையாளர்களுடன் தொடர்புகொண்டு அனுமதிகளை உறுதிசெய்துகொள்ளவும்.

நிர்வாகம்.

*ரிமர் மண்டப பாலர் பாடசாலை,*
*(யாழ். பொலிஸ் நிலையம் அருகில்)*
*யாழ்ப்பாணம்.*
(96989)

கில்னர் மண்டப பாலர் பாடசாலை,
*கில்னர் ஒழுங்கை,*
*கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு 08 – 01 – 1923*



*உதிர்வு 08 – 01 – 1997*

### அமரர் பொன்னையா நவரத்தினசிங்கம்

சமாதான நீதிவான்

*(உரிமையாளர், யாழ்தேவி ரான்ஸ்போட் சேவிஸ்)*

திதி: 12.01.2002

எங்கள் குடும்பத் தலைவனாய் அன்பின் திருவுருவாய்
வாழ்ந்து எங்களுக்கு வாழ்வளித்த வழிகாட்டியே!
எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களுக்காகவே பிரார்த்தித்து,
எங்கள் நினைவுடனேயே இயற்கை எய்திய நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து போயினும்
உங்கள் திருவுருவும், பாச நினைவுகள் என்றென்றும்
எங்கள் மனதில் நீங்காது நிற்கும்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம்வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

*புதிய செம்மணி வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(96984)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார், உறவினர்கள்.

## நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி

பதினைந்தாம் ஆண்டு

மண்ணில் 30 - 09 - 1930



விண்ணில் 30 - 04 - 1987

### அமரர் த.நல்லையா

முதலாம் ஆண்டு



அமரர் ந.அருள்றஞ்சன்
(றஞ்சன் - கனடா)
மண்ணில்: 13-09-1961
விண்ணில்: 25-01-2001
திதி: 13-01-2002

பதினேழாம் ஆண்டு



அமரர் ந.அருள்நேசன்
(ஈசன்)
23-02-1965
03-12-1985

பதினோராம் ஆண்டு



அமரர் ந.பகீரதன்
(கண்ணன்)
07-07-1971
30-07-1991

*பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்*
*இரக்கத்தின் இலக்கணமாய் ஈகையின் சின்னமதாய்*
*குடும்பத்திற்கு ஒளிவிளக்கை ஏற்றிவிட்டு*
*இவ்வுலக வாழ்வு போதுமென இறைவன்*
*பாதம் நால்வரும் சேர்ந்து விட்டீர்கள் - ஆனால்*
*நாமிங்கு உங்கள் நினைவால் தினம் வாடுகின்றோம்.*

நிரந்தர முகவரி:
*வண்ணாங்கேணி, பளை.*

தற்காலிக முகவரி:
*இல.98, பலாலி வீதி, கோண்டாவில்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்
(96987)

## ஜோ எகட்டனின் ஜெசித்தாரா

இன்று முதல்........வழங்கும்

குங்குமப்பூ ஸ்பெஷல் சிக்கின் புரியாணி

ரூபா 125 மட்டுமே.

எமது உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு மூவர்ணக் கலண்டர் இனாம்!

வழமையான உணவு வகைகளும் வழமைபோல...

ஜோ எகட்டனின் ஜெசித்தாரா விருந்தகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை, சுண்டுக்குளி.

★ நவயுகத்தின் நாயகி ஜெசித்தாரா ★

(97014)


உ

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியமும் சமய நிறுவனங்களும் ஒன்றிணைந்து நடத்தும்

## பீடாரோகண விழா

காலம்:- விஷு வருடம் மார்கழி மாதம் 28 ஆம் நாள் (12.01.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி (இலங்கை நேரம்)

இடம்:- நாவலர் ஆச்சிரம மண்டபம் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தலைமை:- பேராசிரியர், கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் (கலைப் பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

இவ்விழாவில் சிவாச்சாரியர்கள், சைவக்குருமார்கள், சைவப்பெரியோர்கள் அனைவரும் பங்குகொண்டு சிறப்பித்து குருபீடாதிபதியின் ஆசிகளைப் பெற்று மகிழுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- விழா அமைப்பாளர்கள்.

தலைமைச் செயலகம்,
*74, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.* (97006)

## விண்ணக வாழ்வின் 45ஆவது நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1981 | 2001 |
| 11 | 11 |
| 06 | 29 |

### செல்வன் யோகசிங்கம் கமல்ஸ்ரோன்

(கமல்)

*இமயம் சரிந்ததென்று*
*இதயம் குமுறுதையோ!*
*மின்னாமல் முழங்காமல் வந்த வினையால்*
*கண்ணீர்க் கடலில் தவிக்கின்றோம் இங்கு!*

*இனிய இளமையோடு இறைபதம் அமர்ந்திடவே*
*இறைஞ்சுகின்றோம் நாம்!*

இன்று (12.01. 2002) சனிக்கிழமை மு.ப.11.30 மணிக்கு யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெறும் இரங்கற் திருப்பலியிலும், தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதரிகள், உற்றார், உறவினரும்,
ரெலோ அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர் லிங்கம் அவர்களும்
வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரும்
கௌரவ M.K.சிவாஜிலிங்கம் (M.P.) அவர்களும்.

*இல.193, 2ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (97008)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 19 - 06 - 1940 | 13 - 12 - 2001 |

### திருமதி யோகம்மா சின்னையா

அன்பின் உறைவிடமே பாசத்தின் திருவுருவே
எங்கள் அம்மா!
நித்தமும் வாடுகின்றோம் உம் பிரிவால்
உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சில் என்றும் நிலைத்திடும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- குடும்பத்தினர்.

*சிவன் கோயிலடி,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (97013)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையினர் வழங்கும் 'மதுரகானங்கள்' இசை நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் இரு காட்சிகளாக யாழ்.பலகலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

(ஐ-4)

## அச்சுவேலியில் வங்கிக் கிளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் கருமங்கள் எதிர் வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தொடக்கம் அச்சுவேலியில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வங்கியின் புதிய கட்டடத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி க.துரைராசா வங்கிக் கருமங்களை அன்று காலை 9.00 மணிக்கு புதிய கட்டடத்தில் ஆரம்பித்து வைப்பார்.

(ஐ-180)


தேவை

கணனி இயக்குநர்

(இரு பாலாரும்)

சகல வேலையும் தெரிந்தவர் தேவை.

உடன் தொடர்புகொள்ளவும்.

சாா மல்ரிமாநல் நிலையம்

பிரதான வீதி, அச்சுவேலி.

ENGLISH

உயர்கல்வி கற்போர், தொழில் புரிவோர், பல்கலைக்கழக அனுமதி கிடைக்க இருப்போர் அனைவருக்குமான விசேட வகுப்பு.

சனி : 1 - 2 p.m.

ஞாயிறு : 1 - 3 p.m.

ஆரம்பம் :- 12.01.2002 சனி

By:- RAJESVARAN

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (97019)

லஷ்சுமி இணுவில்

அஜித், மம்முட்டி, தபு, ஐஸ்வர்யா

கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்

தினசரி:- 10.30, 2.30 (ப.நே.)

நாளை முதல்

மாலைக்காட்சி 5.00, 9.00 (ப.நே.)

ஆனந்தம் (96975)

ராஜா யாழ்ப்பாணம்

வடிவேலு, விவேக், குஷ்பு மற்றும் பலர் நடித்த

விரலுக்கேத்த வீக்கம்

தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00 (C/20092)

நிறைஞ்சனாஸ் சங்கானை

கமல் (இரட்டை வேடம்), மனிஷா, ரவீனா மற்றும் பலர் நடித்த

ஆளவந்தான்

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்

மகத்தான பொங்கல் வெளியீடு

சரத்குமார், மீனா, பிரகாஷ்ராஜ் நடித்த

ரிஷி

(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 3.00 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பூலோகேந்திரன்

(முன்னாள் அதிபர் - சேர் கனகசபை வித்தியாசாலை, பன்னாலை)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் வவுனியாவை வசிப்பிடமாகக்கொண்டவருமான செல்லையா பூலோகேந்திரன் (10.01.2002) வியாழக்கிழமை காலை வவுனியாவில் இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் புனர்பூஷணியின் அன்புக் கணவரும் தேனுகா குலேந்திரன் (ஜேர்மனி), சுதாகரன் (ஜேர்மனி), ஹேமலதா உதயராஜ் (ஆசிரியை-இந்துக் கல்லூரி, திருமலை), சுலோஜனன் (ஹொலண்ட்), அபிர்தினி பகரதன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2002 வியாழக்கிழமை மாலை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி புனர்பூஷனி பூலோகேந்திரன் (மனைவி)

*94, இரண்டாவது ஒழுங்கை,*
*பட்டாணிச்சோர் குளம், வவுனியா.* (97007)

## தம்பு பரராஜசிங்கம்

(இளைப்பாறிய எலக்ரிக்கல் சுப்பிரின்டன்ட்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பரராஜசிங்கம் நேற்று (11.01.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பு மாணிக்கத்தின் அன்பு மகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாமினி (சுவிஸ்), அமுதினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஈசன் (சுவிஸ்), மதன் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் சாளினி, சாரங்கா (சுவிஸ்), கௌத்தம் (கொழும்பு) ஆகியோரின் பேரனும் கந்தையா, யோகராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*டச் றோட்,*
*உடுவில்.* (97003) ப.கனகேஸ்வரி (மனைவி)

## திருமதி உமாதேவி மகேஸ்வரன்

காரைநகர், வலந்தலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி உமாதேவி மகேஸ்வரன் (09.12.2002) புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் தம்பதியினரின் அன்பு மருமகளும், சுகந்தினி, சிதம்பரேசன், உருத்திரன், சுதாகர், சிவானுஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிலிங்கம், விஜிதா, சிவசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷன், மதுரா, வித்தியா, விதுஷா, திவ்யா, நிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பரமேஸ்வரியின் அன்புச் சகோதரியும், கருணைலிங்கம், ஜெகதாம்பிகை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2002) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

*உடையார் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (97009)

தகவல்:-
இ.மகேஸ்வரன் (கணவர்)
E.S.இ.மி.ச., சுன்னாகம்

## திருமதி காசிப்பிள்ளை வைத்திலிங்கம்

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி காசிப்பிள்ளை வைத்திலிங்கம் நேற்று (11.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் முத்து வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் பத்மாசினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேந்திராவின் (கனடா) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2002) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்திரபவனம்,*
*செட்டித்தெரு,*
*பருத்தித்துறை.* (97012)

தகவல்:
நவரட்ணராஜா மனோன்மணி (பெறாமகள்)

## கனகசபை சண்முகநாதன்

(இலங்கை நிர்வாகசேவை அதிகாரி (S.L.A.S.)
உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க முன்னாள் தலைவரும்,
காங்கேசன்துறை பட்டின சபை, நெல்லியடி பட்டினசபை,
பருத்தித்துறை நகராட்சி மன்றம் ஆகியவற்றின்
முன்னாள் விசேட ஆணையாளரும் செயலாளரும்)

09-01-2002 புதன்கிழமை காலமாகிய அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11/1A, செட்டித்தெரு,*
*நல்லூர்.* (97005)

தகவல்:
ச.கருணாகரன் (மகன்)

## திருமதி பொன்னம்பலம் மகேஸ்வரி

(இராசாத்தி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் மகேஸ்வரி நேற்று (11.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (தம்பிராசா), இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேந்திரராஜா, குவேந்திரராஜா (இந்தியா), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் தெய்வநாயகி, சரோஜினிதேவி தியாகராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், சயந்தரூபன், கேமரூபன், பிரணவரூபன், இராஜிதா (லண்டன்), விஜிதா (கனடா), சுஜிதா (கனடா), நதீபன் (இந்தியா), பேபிறோசா, அனுசா (கனடா), சங்கர், ஸ்கந்தகுமார் (ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), சர்வேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.01.2002) அவரது இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*201, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (97015)

தகவல்:-
மகேந்திரராஜா (மகன்)



கொழும்பு வந்திருந்த நோர்வேத் தூதுக் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்த சமயம் எடுக்கப்பட்ட படம். இடம் இருந்து வலமாக - தூதுக்குழு உறுப்பினர் எரிக் சொல் ஹெய்ம், நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் நோர்வே பிரதி வெளிவிவ கார அமைச்சர் ஹெல்கிசன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் காணப்படுகின்றனர். (க-3)

# ஒரு கோடிரூபா மருந்துகள் குழி தோண்டிப் புதைப்பு!

கொழும்பு,ஜன.12

அரச மருத்துவப் பொருளகள் விநியோகப் பிரிவினர், பாவனைக்கு உதவாத பெரும் தொகையான மருந்து வகைகளை முல்லேரியாவ ஆஸ்பத்திரி வளவில் நேற்று புதைத்து விட்டனர்.

பாவனைக்கு ஒவ்வாதவை என இனங்காணப்பட்டு கடந்த 10 வருடங்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பல லொறிச் சுமைகள் கொண்ட பொருளகளே இவ்வாறு அழிக்கப்பட்டன. இந்த மருந்துப் பொருள்கள் ஏறக்குறைய ஒரு கோடி ரூபா பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## அதிக விலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையங்கள் ஊடாக - கட்டுப்பாட்டு விலையில் - பொதுமக்களுக்குத் தேவையான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுவதற்கு உரிய திட்டங்களைத் தீட்டி, சம்பந்தப்பட்டோருக்கு தேவையான பணிப்புரைகளை விடுக்குமாறும் -

யாழ். அரசாங்க அதிபரோடும், மேலதிக அரசாங்க அதிபரோடும் தொடர்புகொண்டு நீதிபதி உத்தரவு விடுத்தார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியும் நீதிவானும் என்ற கோதாவிலும் -

மல்லாகம், பருத்தித்துறை மேலதிக நீதிவானாக நீதிச்சேவை ஆணைக்குழு தன்னை நியமித்துள்ளதாகவும் -

இந்த நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்தின் அடிப்படையில் தனது தற்துணிவைப் பிரயோகித்து இந்த உத்தரவுகளைப் பிறப்பிப்பதாக நீதிபதி நேற்றுமுன்தினம் தான் விடுத்த உத்தரவில் தெரிவித்திருந்தார்.

இதற்கு மேலதிகமாக உத்தரவு ஒன்றை அவர் நேற்று விடுத்தார்.

எரிபொருள் விவகாரம் குறித்து அரச அதிபர், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் நடத்திய கலந்தாலோசனையில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இவ்வாறு சட்ட அனுமதியின்றியும் அதிக விலைக்கும் எரிபொருளை விற்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக மேலதிக அரசாங்க அதிபர் தமக்கு தெரியப்படுத்தியுள்ளார் என்று நேற்றைய உத்தரவில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பாதுகாப்பு மற்றும் அனுசரணையை வழங்கும்படி யாழ்.பொலீஸாருக்கும் நீதிபதி தமது நேற்றைய உத்தரவில் கட்டளை பிறப்பித்துள்ளார்.

சட்ட அனுமதியின்றியும் அதிக விலைக்கும் எரிபொருளை விற்போருக்கு எதிராக அடுத்த செவ்வாய்க் கிழமைக்குப் (15ஆம் திகதிக்குப்) பின்னர் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார். (உ-3-10)

## சுரேஷின் மனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அமைப்புக்கு நிதிசேகரித்தார் என்றகுற்றச் சாட்டின் பேரில் தன்னை நாடுகடத்த எடுக்கப்பட்ட முடிவை எதிர்த்து சுரேஷ் மாணிக்கவாசகம் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணையின் போதே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-7-4-ரி)

## இளவாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபரிடம் இருந்து துப்பாக்கி ஒன்றைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பிரசாரக் கூட்டத்தில் பங்குபற்றிய ஐ.தே.கட்சி வேட்பாளரான தி.மகேஸ்வரனை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதும் - அவர் மயிரிழையில் உயிர் தப்பியதும் தெரிந்தவையே. (க-3-48)

## வேண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டேலா அனுப்பிவைத்த பாராட்டுப்பத்திரம் ஒன்றும் வாசிக்கப்பட்டது. அந்தப் பத்திரத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் ஒன்று உருவாகியுள்ளமை நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகும். எனவே இந்தச் சூழலைத் தகுந்த முறையில் பயன்படுத்துவது இருதரப்பினரதும் கடமையாகும்.

எனவே யுத்தசூழல் ஒன்று மீண்டும் உருவாகக்கூடாது. இந்த விவகாரத்திலும் இரு தரப்பினரதும் கவனம் தேவை - என்றுள்ளது. (க-7)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினர் இங்கு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மற்றும் தமிழ், முஸ்லிம் மக்களின் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கொழும்புப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு நேற்று நோர்வேக் குழுவினர் ஒஸ்லோ புறப்பட்ட சமயம் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்படி எச்சரிக்கையுணர்வுடன் கூடிய நம்பிக்கை வெளியிடப்பட்டது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

இரு தரப்புடனும் நடத்திய பேச்சுக்கள் இரு தரப்புக்கும் இடையிலான நம்பிக்கையை வளர்ப்பனவாக அமைந்தன.

"பேச்சுக்கான நிலையை நோக்கி அடி, அடியாக நகர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நாங்கள் உணர்கின்றோம்" - என்று ஹெல்கிஸன் தெரிவித்தார்.

என்றாலும் இந்த நடவடிக்கை சவால் நிறைந்ததாக அமைவதோடு இருதரப்பும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியதாகவும் இருக்கும் என்பதையும் அவர் கோடிட்டுக் காட்டினார்.

யுத்தப் பிரதேசத்தில் உள்ள மக்களின் நிலைமை மற்றும் இருதரப்பு யுத்தநிறுத்தம் ஒன்றை உருவாக்குதல் ஆகிய விடயங்கள் குறித்து லண்டன் மற்றும் கொழும்புப் பேச்சுக்களில் ஆராயப்பட்டது.

இந்த விடயங்களில் பொதுக் கருத்தை எட்டுவதற்கான விருப்பமும் தீர்க்கமான முடிவும் புலிகள் மற்றும் விக்கிரமசிங்கவின் அரசு ஆகிய இருதரப்பிலும் இருந்து புலப்பட்டது.

"ஜனாதிபதி குமாரதுங்கவுடனான எனது சந்திப்பின்போது புதிய அரசின் சமாதான முயற்சிக்கு ஆதரவு தரும் அவரது நிலைப்பாடு என்னை ஊக்கப்படுத்துவதாக அமைந்தது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு ஸ்ரீலங்காவின் பெரிய கட்சிகள் இரண்டுக்கும் இடையில் கூட்டு ஒத்திசைவு இருப்பது அவசியம் என்பது அவரது கருத்தாக உள்ளது" - என்றார் ஹெல்கிஸன்.

- இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அருந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதென அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தமிழினத்தின் வரலாற்று எழுச்சி நூல் வெளியீடும் அன்றைய தினம் நடைபெறும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் அமைப்பினர் கௌரவமான முறையில் கலந்துகொள்வதற்கு உரிய வழிவகைகளைச் சகல தரப்பினரும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதை இம்முறை 'பொங்கு தமிழ்' நிகழ்வு மூலம் வலியுறுத்தவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

'பொங்கு தமிழ்' நிகழ்வையொட்டி குடாநாட்டில் மரநடுகைத் திட்டம் ஒன்றையும் நடைமுறைப்படுத்தவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாகும் மரநடுகை குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதன் மூலம் அருகி வருகின்ற மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். அத்துடன் வளமான சமுதாயத்தையும் உருவாக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)


## புதிய வகுப்புகள் ஆரம்பம்

Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Application
Dip. in Video Mixing
Dip. in Web Designing

Sunday 10.00
Tuesday 10.00

Duration: 3 Months

இது O/L எழுதிய மாணவர்களிற்கு மிகவும் உகந்தது

For further details
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P.2674 e-mail: stpedu@slt.lk

வடமராட்சி கண்ட பிரமாண்டம் மீண்டும் யாழ்.மண்ணில்
தைத்திருநாளை முன்னிட்டு...
யாழ்.பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைத் துறையினர் பிரமாண்டமாக வழங்கும்
மதுரகானங்கள்
(பிரமாண்டமான இன்னிசை விருந்து)
☆வித்தியாசமான மேடையமைப்பு ☆பலவர்ணஜால ஒளியூட்டல
☆நடிகர்களில் பல்குரலில் மகிழ்வித்தல்
இவற்றுடன் பிரமாண்டமான இன்னிசை வார்ப்புடன் மேடையேறுகிறது
மதுரகானங்கள்
(பிரமாண்டமான இன்னிசை விருந்து)
காலம்:12.01.2002 காலை 10.00, மாலை 2.00மணி
இடம்: கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்
(காலமாற்றத்தை 9 அல்லது 10.01.2002 உதயனின் கடைசிப் பக்க விளம்பரத்தைப் பார்க்கவும்.) (C/20241)

## கணனிப் பொதுப் பரீட்சை-2001

STP அனுசரணையுடன் நடைபெறும் மேற்படி பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தோரின் பெயர் விபரங்களை STP அலுவலகத்தில் பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இவர்களுக்கான விசேட கருத்தரங்கு ஞாயிறு மாலை 2.00 மணிக்கு STP விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.
-யாழ் பரீட்சை இணைப்பாளர்-

வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!
வடமராட்சி மக்களுக்கு ஒரு நற்செய்தி!
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
திருமண விழாக்களா?
பூப்புப்புனித நீராட்டு விழாக்களா?
பிறந்தநாள் விழாக்களா?




எந்த நிகழ்வு என்றாலும் சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்து நவீன கொம்பியூட்டர் மூலம் DV 500 (வீடியோ கார்ட்) துணைகொண்டு டிஜிற்றல் மிக்சிங் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:
ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்
பிரதான வீதி, பருத்தித்துறை.
070-212278 தொலைபேசி இலக்கம்: 3281



உங்கள் இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கு தேவையான கதிரைகள், மணப்பந்தல், மணவறை மற்றும் தேவையான பாய் வகைகள், பாத்திரங்கள் என்பனவும் வாடகைக்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான கொம்பியூட்டர் பிரிண்டிங் ஒவ்செற் வேலைகள் என்பன குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
(96941)

சைக்கிள், றேடியோ மற்றும் வீட்டுக்குத் தேவையான சகல பொருன்களையும் தவணை முறையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்........
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
பஸ் நிலையம், பருத்தித்துறை.
தொலைபேசி இலக்கம்: 3248

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சாய்குமாரின்
சூர்யா I.P.S
அஸ்டி எலக்ரோனிக்ஸ் யாழ்ப்பாணம்
(C/20262)

விற்பனைக்கு
வெளிவராத புதிய திரைப்பட போஸ்டர்கள் விற்பனைக்கு உண்டு.
வீடியோ சிந்து, உடும்பிராய்.
(C/20260)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.